இலக்கியச் சந்தையில்

முதற் பதிப்பு:
1950 ஜூலை

விலை அணா 8

புதுக்கோட்டை
செந்தமிழ்ப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

இல்க்கியச் சந்தையில்

— கட்டுரைகள் —

மு. அண்ணாமலை

செந்தமிழ்ப் பதிப்பகம்

கீழராசவீதி — புதுக்கோட்டை

கட்டுரைகள்

1. இலக்கிய விமரிசகர்கள்
2. விமரிசனம் கண்ட பயன்
3. அறிஞர்களும் வாழ்க்கை வரலாறும்
4. ரஷ்ய ஞானி
5. சிறுகதை ஆசிரியர் மாபசான்
6. இலக்கியத்தில் காதல்
7. கற்பனைகள்

முன்னுரை

தோழர் மு. அண்ணாமலை எழுதியுள்ள இக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடலாமென்று நான் அவரிடம் யோசனை கூறிய போது, "உங்கள் முன்னுரையுடன் அப்புத்தகம் வெளிவரவேண்டும்" என்று நிபந்தனை போட்டார் அவர். அந்நிபந்தனையை மீறமுடியாமலேயே சில வரிகள் முன்னுரை என்ற பெயரில் இப்புத்தகத்தில் சேர்த்திருக்கிறேன்.

"இலக்கியச் சந்தையில்" என்று இப்புத்தகத்துக்குத் தலைப்பு தரப்பட்டிருக்கிறது. நாம் காணும் வாணிபச் சந்தைகளில் நிரம்பி வழியும் போட்டி, பொறாமை, பொய், பித்தலாட்டம், அமர்க்களம், கண்ணுக்குத் தெரியாதபடி அடங்கியொடுங்கி மறைந்து கொண்டிருக்கும் நேர்மை-இப்பண்புகளெல்லாம் இலக்கியச் சந்தையிலும் உண்டு, நிறைய உண்டு என்று அறியும்போது இளைஞர்களுக்கு ஒரே வியப்பாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை என்னவோ அப்படித்தான்!

"இலக்கிய விமரிசனம் தமிழ் நாட்டுக்குப் புதிது; நாங்கள் தான் அதனைக்கொண்டு வந்திருக்

கிறோம்'' என்று மார்தட்டுவார்கள் சிலர்; ''இலக்கிய விமரிசனம் தானே! என்ன கண்டீர் அதில் புதுமை! தமிழில் ஏற்கனவே உள்ளது தானே அது'' என்று மொழிவாரும் உண்டு இரு சாரார் கூற்றும் முழு உண்மையல்ல; முழுப் பொய்யுமல்ல. ஏற்கனவே இருந்து வந்திருக்கிற தென்பது என்னவோ உண்மைதான்! மேலை நாட்டில் இப்போது வளர்ந்துள்ள அளவுக்கு விமரிசனக்கலை தமிழில் விரிவடையவில்லை என்பதும் ஒப்புகொள்ளப்படவேண்டியதேயாகும்.

இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளிலிருந்து இலக்கிய விமரிசனம் மெத்த அவசியம் என்பதை உணருகிறோம்; விமரிசகர்களின் சமயசந்தர்ப்ப சாதுரியங்களைத் தெரிந்து கொள்கிறோம்; காலத்தை வெல்லும் பேரிலக்கியங்கள் விதவிதமான விமரிசனங்களைப் பெற்று விமரிசகர்களைத் தோற்கடிக்கும் வித்தையைப் புரிந்து கொள்கிறோம்; இலக்கிய உலகம் கலகமும் குழப்பமும் நிறைந்து கலகலவென்று விளங்க விமரிசகர்கள் எத்தனை அவசியம் என்பதையும் அறிந்து கொள்கிறோம்.

அறிஞர்களின் வாழ்க்கை அவர்கள் படைக்கும் இலக்கியத்தை எந்த அளவுக்கு ஒட்டி வருகிறது என்பதை ''அறிஞர்களும் வாழ்க்கை வரலாறும்'' 'ரஷ்யஞானி'' ''சிறுகதை ஆசிரியர் மாபஸான்'' என்ற கட்டுரைகள் கண்கு விளக்குகின்றன. எப்படி அவர்களின் அனுபவங்கள் நமக்கு என்றும் இன்பம் தரும் கவிதையாகவோ, சிறுகதையாகவோ, நாடகமாகவோ உருப்பெறுகின்

றை என்பதை அறியும் போது நமக்கு மகிழ்ச்சி மேலிடுகிறது.

"இலக்கியத்தில் காதல்" பெரிய கேள்விக்கு எளிதில் பதிலளித்து விடுகிறது! "கற்பனைகள்" அரிய ஒப்புவமைக் கட்டுரை.

"நண்பர் அண்ணாமலை எதை எழுதினாலும் என்கு எழுதுகிறார்..." என்று ஒரு பிரபல எழுத்தாளர் எனக்கெழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். "ஆம்; அது உண்மைதான்" என்று கூறும் படியாகவே அவர்கம் எழுத்தாற்றல் வளர்ந்து வருகிறதென்பதை யாரும் ஒப்புக்கொள்வர்.

அழகிய கவிதைகள் புனைந்து இளங் கவிஞராகத் திகழும் நண்பர் அண்ணாமலை, ஆங்கில இலக்கியப் பயிற்சியில் ஆர்வம் வரப்பெற்றார். அந்த ஆர்வத்தின் விளைவாகப் பல இலக்கிய வல்லுநர்களை அடையாளம் கண்டுகொள்ள அவரால் முடிந்தது. தாம் பெற்ற பயனை மற்றவருக்கும் அவர் வழங்கும் முயற்சியே இத் தொகுதியில் காணப்படும் கட்டுரைகளாகும்.

ஒரு ஆசிரியர், அவரைப்பற்றி விமரிசகர்கள் கூறும் கருத்து, அவர்தம் வாழ்க்கை வரலாறு காட்டும் சுவையுணர்ச்சிகள், அவர் பெயரில் நம்மெதிரே இருக்கும் இலக்கியம்—இத்தனை கோணத்திலும் கண்டறிந்த உண்மைகளையே அவர் நமக்கு வழங்கியிருக்கிறார். ஒவ்வொரு ஆசிரியரையும் அவர் அறிமுகம் செய்யும் முறை இவ்வாறு புதுமையாக அமைந்திருக்கிறது. அவ்வப்போது தமிழ் இலக்கியங்களினின்றும் ஒப்புநோக்கி அவர்

கூறும் செய்திகளும் பொருத்தமான முறையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இக் கட்டுரைகள் எளிய தமிழில், யாரும் படித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம், கதை போன்ற அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. நண்பர் அண்ணாமலைக்கு இத் துறையில் நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்பதை நான் கூறவேண்டியதில்லை.

புதுக்கோட்டை
10—7—50

முருகு சுப்பிரமணியன்
ஆசிரியர் "பொன்னி"

1. இலக்கிய விமரிசகர்கள்

ரஷ்யக் கவிதைகளைப் படித்தேன். அதில் குறிப்பிடத் தக்க ஒரு வசன கவிதை இருந்தது. இலக்கிய விமரிசகர்களைப் பற்றி அது விவரிக்கிறது. அதை இயற்றிய ஆசிரியர் அந்தக் கவிதைக்கு 'முட்டாள்' என்று பெயரிட்டிருக்கிறார். உலகத்திலுள்ள எல்லா எழுத்தாளர்களின் பொதுவான கருத்தும் இலக்கிய விமரிசகர்களுக்கு எதிரானதாகத்தான் இருக்கிறது.

இலக்கிய விமரிசகர்களிடம் எந்தப் புத்தகத்தை நீட்டினாலும், எந்த எழுத்தாளர் பெயரைக் குறிப்பிட்டாலும், அவர்கள் உடனே அதை மறுபபின்றி ஏற்றுக் கொண்டுவிடுவதில்லை. அப்படி ஏற்றுக்கொண்டால் தங்களின் திறமைக்கும் மதிப்புக்கும் ஏதோ குறைவு வந்து விட்டதாக எண்ணுகின்றனர். "இது மட்டம்" "அது சரியில்ல" என்று ஏதாவது சொல்லித்தான் அவர்கள் வாழ்வு நடைபெறவேண்டியிருக்கிறது. கோல்டுஸ்மித் கூறுவது போல ஆசிரியரின் புத்தகங்களில் குறைபாடு இல்லாவிட்டால் தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி எழுதிச் சந்திக்கிழுத்துத் தாறுமாறாகத் திட்டிக் கொண்டிருப்பார்கள். வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையில் நின்றுகொண்டு 'ஜால்சாப' செய்யும் தரகுக் காரர்கள்தாம் இவர்கள். மக்களுக்கு "நல்ல புத்தகம் இது; நல்ல சரக்கு இது" என்று ஆராய்ந்து, இலக்கியச் சுவைக்கு வழிகாட்டுவதாகச் சொல்லிக்கொண்டும் பித்தலாட்டம் செய்வார்கள். சும்மா கிடக்கும் ஒரு ராமலிங்கம் இவர்கள் கையில் ஒரு சுதந்திரக் கவியாகலாம்; திறமையுள்ளவன் மறைக்கப்படலாம். இப்படி இலக்கிய

உலகத்தைக் 'கழைக்கூத்தாக' ஆக்கிக்காட்டுபவர்கள் இவர்கள் என்றாலும், அதனால் இலக்கியச் சுவையாளர்களுக்குத் தனிச் சுவையொன்று ஏற்படுகிறது எனபது மெய்யே! செத்த பிணம்போல் கிடக்காமல் ஏதோ கலகலப்புடன் சண்டையும் வம்புகாக இருந்தால்தான அறிவு விரிய இடம் உண்டாகும். இந்த அடிப்படையின் பேரிலும், அதனால் ஏற்படும் அவசியத்தின பேரிலும் தான இலக்கிய விமரிசகர்கள் பொதுவாக வெறுக்கப் பட்டாலும், உயிரோடு வாழமுடிகிறது. இது உலகெங்கும உள்ள இலக்கிய விமரிசகர்களைப்பற்றிய பொதுவான கருத்தாகும்.

இந்தத் தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் நாம் கொஞ்சம வருந்தவேண்டியவர்களாகவே இருக்கிறோம. இங்கே இன்னும் இலக்கிய விமரிசகர்கள் உண்டாகவில்லை. தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டால், அரைகுறையாகத் தெரிந்தவர்கள் இலக்கிய விமரிசனம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்; எல்லாம் தெரிந்ததாக 'அம்பக்' செய்கிறார்கள் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அயல் நாட்டு இலக்கியங்கள் ஒன்றிரண்டு பார்த்திருக்கிற அளவிலே தாங்கள் எல்லாம் அறிந்துகொண்டதாகப் பாவனை செய்கின்றனர். யாராவது மேனாட்டு ஆசிரியரின் முத்திரைக்குக் கீழே கருத்துக்களை வெளியிடுவதைப் பெருமை என்று எண்ணுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள இலக்கியங்களைப் பற்றிய வரன் முறையான வரலாறு இவர்களுக்குத் தெரியவில்லை. இன்னும் சிறப்பாகச் சொன்னால் இவர்களுக்குத் தமிழே சரியாக எழுதத் தெரியவில்லை. தமிழ் மரபு, தமிழ் நடை, தமிழ் இலக்கணம் முதலியவற்றை கனகு அறியாதவர்கள் இவர்கள்; இத்தகையவர்களால் இன்றைய நிலையிலே தமிழ் இலக்கியம் நன்மை யடையா விட்டாலும், தமிழ்நாட்டில் இலக்கிய விமரிசனம் உண்டாக வழிவகுத்தவர்கள் என்ற பெருமை அவர்கட்கு என்றும் உண்டு.

ஒரு இலக்கிய விமரிசகர், கவிஞர் பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பிடும் போது, "சில வார்த்தைப பிரயோகங்

கள் தமிழ் மரபு தெரிந்த தமிழ்க் காதுக்கு அபசுரமாய் விழுகின்றன'' என்று எழுதுகிறார். கவியரசரைக் குறை கூறும் இவரது தமிழ் நடையைப் படிக்கும்போது 'எஞ் சின' சபதம காதைத் துளைத்து, குறுபபி அளவாய்க் குடைந்தெடுப்பதுபோல் இருக்கிறது. 'முத்தம் கொடுத்தான்' என்று எழுதுவதற்கு முத்தினன் என்று எழுதுகின்றார். இவரது புத்தகத்தில் எண்ணற்ற இடங்களில் இந்தச் சொல் திரும்பத் திரும்ப வரும்போதெலலாம 'தமிழ்மரபு தெரிந்த தமிழ்க் காதுகளுக்கு அபசுரமாய்' விழுகின்றது. முத்தினன் என்பது 'முத்தம் கொடுத்தான்' என்ற இரண்டு சொற்களுக்குரிய ஒரே சொல், அதாவது வினைச் சொல் என்று ஆசிரியர் தவறாக எண்ணியிருக்க வேண்டும. சில பெயர்ச் சொற்கள வினையாகமாட்டா என்ற தமிழ்மொழி இயல்பை அவர் அறிந்திருக்க முடியாது. 'சட்டம் செய்தான்' என்பதனைச் சட்டினன் என்றோ, 'குற்றம் செய்தான்' என்பதனைக் குற்றினன் என்றோ எழுத முடியாது.

இது பொன்றே, தமிழ்நடை, தமிழ் மரபு, தமிழ் மொழி ஆகிய மூன்றையும் சரிவர உணராத தமிழ் எழுத்தாளர்களும். இலக்கிய விமரிசகர்களும இந்தத் தமிழ்நாட்டில் அநேகர் உள்ளனர். 'மறுமலாச்சி' என்ற பெயரால் தங்களை மறைத்துக்கொள்ள அவர்கள் எண்ணுகின்றனர்.

மேனாட்டு இலக்கியங்களைப் பற்றிய முழு அறிவோ அன்றித் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய முழு அறிவோ இன்றி 'வெத்து வேட்டு விமரிசகர்கள்' தமிழில் தங்டு தந்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தத் தங்டு தந்தக்காரர்களுக்கு ரஷ்யக் கவிஞர் இவான் தூர்கானேவ் எழுதியிருக்கும் கவிதை சரியான சூடாகும்! அந்த வசன கவிதை அப்படியே கீழே வருகிறது.

○ ○ ○

மூட்டான்

மூட்டான் ஒருவன் இருந்தான். கெடுகாள் அவன் மன அமைதியோடு வாழ்ந்து வந்தான். ஆனால் நாளவட்டத்

தில், 'அவன் ஒரு முட்டாள்' என்று எல்லோரும் பேசிக்கொள்வது அவன் காதிற்கு எட்டியது.

அந்த முட்டாள் பெரிதும் வெட்கமடைந்தான். அந்தப் பழிச் சொல்லை எப்படியாவது போக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினான்.

திடீரென்று ஒரு யுக்தி அவனுடைய மங்கிய மூளையிலே தோற்றம்பெற்றது. நேரம் கடத்தாமல் அதைச் செயலாக்க முற்பட்டான்.

ஒரு நண்பன் அந்த முட்டாளைத் தெருவில் சந்தித்தான். நண்பன் அவனிடம் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு ஓவியனைப் பற்றி மிகவும் உயர்த்திச் சொன்னான்.

"நான் சொல்லுகிறேன்: ஓவியன் இந்தக் காலத்திற்குச் சரியானவன் அல்ல; புதுமைக்கும் அவனுக்கும் ஒத்துவராது" என்று கோபத்தோடு முட்டாள் கத்தினான். மேலும் தொடர்ந்து "நான் அவனை உயர்ந்த ஓவியன் என்று ஒப்புக்கொள்ள முடியாது; காலத்தோடு ஒட்டி வளரும் ரஸனை உன்னிடம் இல்லை" என்றான்.

அந்த நண்பன் ஒரு கணம் திகைத்தாலும், அதை ஒப்புக் கொண்டு போய்விட்டான்.

பின்னர் மற்றொரு நண்பனைச் சந்தித்தான். அவன் முட்டாளிடம் "நான் நேற்றுப் படித்த அந்தப் புத்தகம்.....ஆகா! மிகவும் உயர்தரமாக எழுதப்பட்டுள்ளது!....." என்றுசொன்னான்.

"உனக்கு வெட்கமாக இல்லை! அந்தப் புத்தகமா?.....நான் சொல்லுகிறேன். ஒன்றுக்கும் பயனில்லை! என்ன புதிய விஷயம் அதில் இருக்கிறது? காலத்தோடு ஒட்டிய ரஸனை உன்னிடம் இல்லை" என்று முட்டாள் சட்டென்று பதில் அளித்தான்.

மூன்றாவதாக ஒரு நண்பன் வந்தான். அவன் தனது மற்றொரு நண்பனைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசினான்.

"நான் சொல்லுகிறேன். உன் நண்பன் ஊரறிந்த காலாலி; சூடிகாரன்; அவனுடைய சுற்றத்தினர் பலருக்குத் தீங்கிழைத்

திருக்கிறான்..... எல்லோருக்கும் அது தெரியும். காலத்தோடு ஒட்டி உண்மை அறியக்கூடிய திறமை உன்னிடம் இல்லை" என்று வழக்கமான மற்று பொழியை உதிர்த்துத் தள்ளினான். மூன்றாவது நண்பன் வெட்கப்பட்டு, முட்டாளின் சொற்களை நப்பிச் சென்றான். தனது நண்பனின் உறவையும் உடனே அறுத்துக்கொண்டான்.

தன் முன்னிலையில் எந்த நூல் புகழப்பட்டாலும், யார் புகழப்பட்டாலும் இப்படியே மறுத்துக்கொண்டிருந்தான் முட்டாள். சில சொற்களை வைத்துக் கொண்டே அவனது 'உருட்டல் வேலை' நடந்தேறியது!

சில சமயங்களில் யாரையேனும் பார்த்தால், "பெரிய அறிஞர்களின் வாக்குகள் அனைத்தும் சரியென்று நினைக்கிறீர்களா?" என்று கேட்பான்.

இதனால் பலரும் அவனை, 'மகா கெட்டிக்காரன் – திறமை சாலி..... அடடா! எவ்வளவு அறிவு!" என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். "எப்படிப் பேசுகிறான்..... அவனிடம் ஒரு தனிக் திறமை இருக்கிறது.....!" என்று மற்றவர்களும் பேசிக் கொண்டனர்.

இதன் பயனாக ஒரு ஆசிரியர் முட்டாளைத் தன் பத்திரிகையின் விமரிசன கர்த்தாவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாராயிருந்தாலும், எந்தப் புத்தகமாயிருந்தாலும், தெரிந்ததோ தெரியவில்லையோ அதைப்பற்றிக் கவலைப்படாமல், தன் நண்பர்களிடம் கூறிவந்த வாசகங்களையே ஒரு எழுத்துத் தவறாமல் எழுதித் தள்ளினான்.

பெரிய பெரிய அறிஞர்களைத் தாக்கி எழுதியவுடன் 'இலக்கிய விமரிசகன்' என்ற பெயர் தானாக வந்து தொத்திக்கொண்டது. இளைஞர்கள் அவனைப் போற்றினர்கள். அவனுக்குப் பயப்பட்டார்கள்.

அந்த இளைஞர்கள் என்ன செய்வார்கள்! பாவம்!

முட்டாள் சொல்லும் பொது விதிப்படி, யாரையும் புகழக் கூடாது என்றும் அவனை மட்டும் புகழலாம். இல்லாவிட்டால்

'காலத்தோடு ஒட்டிய ரஸனை உன்னிடம் இல்லை' என்று சொல்லி விடலாம் அல்லவா!

முட்டாள்கள் கோழைகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறி விடுகிறார்கள்!

• •

○ ○ ○

இந்த வசன கவிதை 1878ல் ஆண்டில் எழுதப்பட்டது. ரஷ்யாவில் இலக்கிய உலகத்தில் திரிந்து கொண்டிருந்த விமரிசகர்களுக்கு மறைவாகக் கொடுக்கப்பட்ட சூடாகும் இது!

இலக்கிய விமரிசகர்களிடம் ரஸனைகள் காணப்பட்டாலும், இலக்கிய விமரிசனம் மிகவும் போற்றப்படுகிறது. அது இலக்கிய ஆக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்பதனையும், அது ஒரு கலையாகத் தனித்து வளரக்கூடியது என்பதனையும், உலக இலக்கியங்கள் நமக்குக் காட்டிவருகின்றன.

ஒரு நல்ல விமரிசகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிப்பயிற்சி இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இலக்கிய விமரிசனம் என்பது ஒப்புநோக்கித் தெளிவுகூறும் வேலையாகையால் மற்ற மொழிகளின் இலக்கியப் போக்கு அவனுக்குத் தெரிந்திருப்பது நல்லது. சிறந்த விமரிசகர்கள் என்று கருதப்படும் ஆங்கில விமரிசகர்கள் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருக்கின்றனர். அப்பொழுதுதான் அவர்கள் எந்தப் பொருளைப்பற்றியும் தீர்மானமான கருத்துக்கொள்ள முடியும். காம்பெக்ளெக் சொல்லுவதுபோல விமரிசகர்கள் நீதிபதிகள். புத்தகங்களையும் புத்தகம் எழுதியவர்களையும் இவர்கள் நேர்மையோடு, விருப்பு வெறுப்பின்றி விசாரணை நடத்துவார்களானால் இலக்கிய உலகம் நன்கு விளைவடையும். ஒரு நல்ல விமரிசகன் ஒவ்வொரு வாசகனையும் ஒவ்வொரு குட்டி விமரிசகனாக ஆக்கிவிடுகிறான். அதுதான் அவனது உண்மையான வெற்றி! ஒரு புத்தகத்தைப் படித்த அளவிலே எல்லோரும் அதைப்பற்றி

ஒரு முடிவுக்கு வந்துவிடுவதில்லை. "கன்ருக இருந்தது" – "மட்டம்" என்ற இந்த வழக்கமான சொற்கோவைகளை எல்லோரும் கூறிவிட முடியும். ஆனல் "ஏன்?" என்ற கேள்வியை எழுப்பிக் காரணம் காட்ட முயற்சிக்கும் போது தான இலக்கிய விமரிசனம் முளைவிட ஆரம்பிக்கிறது. விமரிசகனுக்கு ஒரு எழுத்தாளனைவிடப் பத்து மடங்கு விரிவான அறிவு வேண்டும்; எழுத்தாளனுகவும் விமரிசகனுகவும் இருக்கும் சிலர் அடிக்கடி சிக்கலிலே மாட்டிக்கொண்டு விடுவார்கள். தனக்குள்ள குறைபாடுகளை, (அதாவது தனக்குத் தெரிந்தும் விளக்கமுடியாது இருக்கும் குறைபாடுகளை) மீக்கி மற்றவைகளைப்பற்றி இவர்கள் விமரிசனம் செய்வார்கள். அல்லது தங்கள் பிறர்மேல் காட்டும் குறைபாடுகளுக்கே தாங்களும் ஆளாகியிருப்பார்கள். அவர்கள் காட்டிய அளவுகோலில அவர்களை 'மிகமட்டமான எழுத்தாளர்கள்' என்பதை வெளியாக்கப் போதுமானதாயிருந்தால் அதைவிட அவலம் வேறென்ன வேண்டியிருக்கிறது? ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பல குறைகள் கூறினர். ஆனல் அவரும் அதே குறைகளுக்கு ஆளாகியிருப்பதை மேக்காலே என்பவர் இடித்துக்காட்டி எழுதினர். விமரிசன ஒவ்வொரு சொல்லும் சிந்தித்தே எழுத வேண்டும். விமரிசனம் என்பது கத்திமேல் நடப்பதை விடக் கடினமானது.

மனிதன் சொந்தமான தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை யுடையவன், என்ற பொது விதி, அல்லது பொதுவான கோளாறு இலக்கிய விமரிசனத்தையும் மருவ்டையச் செய்து விடுகிறது.

இந்தத் தமிழ் நாட்டிற்கு இலக்கிய விமரிசனம் 'புதிய சரக்கு' என்று பலர் கூறிவருகின்றனர். இலக்கிய விமரிசனம் ஒவ்வொரு மொழியிலும் இருந்து வந்திருக்கிறது. ஆனல் முறைகள் வேறுபட்டிருக்கலாம். இலக்கிய விமரிசனம் எதற்காகத் தேவைப்படுகிறதோ அந்தத் தேவையைத் தமிழ் நாட்டார் பல வகைகளில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கின்றனர். ஒன்று உரையெழுதல்; இரண்டாவது அரங்கேற்றம் செய்தல்; மூன்ருவது அணியிலக்கணம் செய்தல் என்பதாகும்.

உரையெழுதுதலில் நிறைந்த புலமையுள்ளவர்களே இறங்கினார்கள்; அதிகாரவைபவ முறையையும் சொற்கோர்வையைப் பிரித்துச் சொல்வைபவ முறையையும் பற்றித் தங்களின கருத்துக்களே வெளியிட்டனர். இன்ன சொல்லுக்குப் பின இன்ன சொல ஏன கொண்டார் என்று இவர்கள் ஆராய்ச்சி செய்தனர். இவர்களது ஆராய்ச்சி சில இடத்தில் பொருந்தியது; சில இடத்தில் கயமாக இருந்தது; ஆனால் பல இடங்களில் அது தேவையற்ற முறையாகவும் காணப்பட்டது. உரைகளில் மாற்றம் கூறினர் இந்த உரையாசிரியர்களின் ஒரு பெருங்குறை ஆசிரியனிடத்தில் கண்ட எந்த வழுவையும் இவர்கள் மூடி மெழுகிச் சமாதானம் கூறி 'வழுவமைதி' என்று கொண்டதேயாகும். தான் உரையெழுத மேற்கொண்ட நூலபபற்றியும், ஆசிரியனப்பற்றியும் இவர்கள் தெய்வ அருளோடு தொடர்பு படுத்தியே பார்த்ததாலும் 'கட்டிய வீட்டுக்குக் குறை சொல்லக் கூடாது' என்ற கோழைத்தனத்தாலும் திடமாக, தப்பென்று பட்டதை எடுத்துக் கூறமுடியவில்லை. இந்தக் குறையை ஒருவாறு நூல அரங்கேற்று விழாக்கள் தீர்த்துவைக்க முயற்சித்தன. உரையெழுதுபவர்களை பெரும்பாலும் இலக்கணப் பண்டிதர்களாகவே இருந்தனராதலால் சொற்றொடர் அமைப்புக்களேயே ஆராய்ச்சி செய்தனர்.

அறிஞர்கள் பலர் கூடியிருக்கும் அவையிலே, நூல் எழுதியவரால் படித்துக் காட்டப்படும். அப்போது அங்கும அறிஞர்கள் அந்த எழுத்தாளனிடம், அந்த நூலில் எழுந்த ஐயங்களே வினவுவார்கள். இதுபோன்ற அணையங்கள் எழுத்தாளனின் குறைபாடுகளைக் காட்ட முடிந்தன. ஆனால் புலவர்களுக்கிடையே ஏற்பட்ட பொறுமை இந்த முறையையும் பயனற்றதாக்கிவிட்டது. இதனால் இலக்கிய விமரிசனத்தின் தேவை தீர்க்கப்பட்டது என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு புலவனும் மற்றொரு புலவனை மட்டப்படுத்த வேண்டும் என்றே வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான். 'சமயோசித புத்தி' உள்ளவன் நாட்டில் கெட்டிக்காரன் என்ற பட்டத்தை வாங்கிக் கொண்டான்.

அணியிலக்கணம், உவமை நயங்களைப் பற்றியும், கருத்துக்களை வெளிப்படுத்தும் செற்றொடர் முறைகளைப் பற்றியும் ஆராய்ச்சி நிகழ்த்தியது. இந்த இலக்கணம் சமஸ்கிருதம் படித்த தமிழறிஞர்களால் விரிவாக எழுதப்பட்டது. சமஸ்கிருத இலக்கிய அறிவு இருந்ததால் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பு நோக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டு மொழியறிவு பல அறிஞர்களுக்குப் புதிய திட்டத்தையும் உள்ளத் திடத்தையும் கொடுத்தது. அத்தகையோரில் சேனாவரையரைக் குறிப்பிடத்தக்க விமரிசகர் என்று கொள்ளலாம். இவருக்கு இரண்டு மொழியறிவு இருந்தது. இவரைப் பின்பற்றி, பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்றவர்கள் வந்தாலும் அவர்களது வடமொழியறிவு அவர்களுக்குத் தங்கையே பயந்தது. நூலாசிரியரின உள்ளத்தைத் தங்களின் உள்ளத்திற்கேற்பத் திரித்தெடுத்துக் கொண்டனர். இதனால் பலர் கருத்து மாறுபாட்டைக் காட்ட முன்வந்தனர். அதனாலும் விமரிசனக் கலையின் பயனை ஒருவாறு எய்த முடிந்தது. வாசகர் பல கருத்துள்ள பல உரைகளையும் ஒப்ப நோக்கிப் புலவரின் உண்மையான கருத்தை அறிய வாய்ப்பிருந்தது.

இவ்வாறு, தனித்து நிற்பதின்றி அங்கங்கு பாலில் வெண்ணெய்போல் கரந்து நின்ற தமிழ் இலக்கிய விமரிசனம் இடைக்காலத்தில் உருவில்லாமல் அழிந்து விட்டது.

∴ ∴ ∴

இந்த நிலையிலே ஆங்கில முறைப்படி வருகின்ற இலக்கிய விமரிசனம் தமிழ் நாட்டுக்குப் புதிதாக இருக்கின்றது. ஆங்கில முறைப்படி கதை உறுப்பினர் அமைப்பு மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. நூலைப் பற்றிய பொதுக் கருத்து. நூலாசிரியனின் மனநிலை, அந்நூலில் கண்ட விஷயங்களுக்கும் அவன் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு, மொழி, நடை, முதலியவைபற்றி ஆங்கிலேயர் மிகவும் ஊக்கத்துடன் கவனிக்கின்றனர்.

மில்டன் இசைக் கலையைப் பற்றித் தன் பாடல் ஒன்றில் மிகப் புகழ்ந்து எழுதினார். மில்டனைப்பற்றி எழுதிய விமரிசகர் இசையின்மீது மில்டனுக்கு ஏன் அவ்வளவு விருப்பம் இருந்தது என்பதை அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் ஒட்டவைத்துக் காட்டுகிறார். மில்டனின் தந்தையார் ஒரு பாடகர், இசைரஸிகர் என்பதையும் விமரிசகர் குறிப்பிடுகிறார். இவ்வாறு எழுத்தாளனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே நூலின உட்கிடைகளை உணரவைக்கின்றனர் மேனாட்டார்.

எழுத்தாளன் தன் உள்ளக் கருத்தை எல்லாக் கதை உறுபபினர்கள் வழியாகவும் கொட்டிவிடக் கூடாது. ஒவ்வொரு கதா பாத்திரமும் ஒவ்வொரு அடிப்படையான உளவுணர்வைக் கொண்டு ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டும். சூதாடி, வஞ்சகன், பூசாரி ஜோஸ்யன, கோமாளி இப்படிப பல வகையான கதாபாத்திரங்களைக் காட்டுமபோது அவரவர்களுக்குரிய வாசகங்களைக் கொடுபபதில் எழுத்தாளன் கவனத்துடன இருக்க வேண்டும். வேலைக்காரன திடீரென்று பூமியின் இழுக்கும் சக்தியையோ, அணுக்குண்டு எந்த ஆண்டில் எப்பொழுது கண்டு பிடிக்கபபட்டதெனறு பேசுவதாக எழுதுவதை ஒப்பமுடியாது. இந்த முறையில் மேனாட்டார் இலக்கிய விமரிசனத்தை நிகழ்த்திவருகிறார்கள.

மேனாட்டு இலக்கிய விமரிசனம் எப்படித் தோன்றிற்று? அதன் முழுவிபரம என்ன? அதை எபபடித் தமிழில் படிப்படியாகக் கொண்டு வரவேண்டுப? இவற்றை இன்றையத் தமிழ் இலக்கிய விமரிசகர்கள் சற்று நினைக்கவேண்டும்.

பண்டிதர் பரம்பரையில் மறைமலை அடிகளார் மேனாட்டு முறையை ஒட்டி முன்னுரைப்பாட்டுகளுப புதிய தொரு உரைவகுத்தார். அவர் நீங்கள புதுமைப்பித்தனை இந்த முயறசியைத் துவங்க வேண்டுமென்று விரும்பினர் 'சிறுகதை' என்பது பற்றி வானொலியில் பேசினர் நமது இலக்கியம்' என்ற சிறு புத்தகம் அவரது எண்ணத்தின சின்னமாக இருந்தே தவிர வெறறியாக

இல்லை! தமிழ் இலக்கிய விமரிசனத்தை முதலில் கொண்டுவந்தவர்களில் திரு சுப நாராயணனும் ஒருவர் ஆவர். அவரது "கவிதை, கலை, விமரிசனம்" என்ற நூல் 500 பிரதிகளே அச்சிடப்பட்டு வெளிவந்தது. தமிழ் நாட்டில் அதிகமான ஆதரவையும், அதற்கான புகழையும் அது பெறமுடியவில்லை! மற்றும் பத்திரிகைகளிலே துண்டு துண்டாகக் கட்டுரைகள் எழுதிக்கொண்டு வருபவர் திரு ரா. ஸ்ரீ. தேசிகன் ஆவார். இவரது கட்டுரைகள் மேலோட்டு எண்ணங்களைக் கோர்வையாகக் காட்டுகின்றன. இவை தோன்ற இருக்கும் பல இளம் விமரிசகர்களுக்குத் துணையாக இருக்கும். இன்னும் இந்தத் துறையில் முயற்சித்துக் கொண்டிருப்பாரில் நண்பர்கள் ரகுநாதன், அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோரை இங்கே குறிப்பிடலாம்.



2. விமரிசனம் கண்ட பயன்

மேனாடுகளில் இலக்கிய விமரிசனம் ஒரு தனிக் கலையாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பர். அப்படியானால் அதற்கென அமைந்த வரலாற்றையும் அது சாதித்த பயன்களையும் நோக்க வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் அது தனிக் கலை என்ற பெயரில் வளரவில்லை; இருந்ததா என்பதே ஐயப்பாட்டிற் குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது.

திருவிளையாடற் புராணத்திலே ஒரு கதை. இறைவன் புலவர்களின் வரிசையையும் திறமையையும் அறிவதற்காகச் சங்கப் பலகை ஒன்று ஈந்தாராம். அது போலிப் பாவலர்களுக்கு இடம் கொடுக்காமல் சிறந்த புலவர்களுக்கு முழம் வளர்ந்து இருக்கை நல்குமாம். இவ்வாறு மூளைக்கு வேலையில்லாமல் இலக்கிய விமரிசனம் அந்தக் காலத்தில் ஈடேறிக் கொண்டிருந்தது. ஆண்டவன் அருளைக் கொண்டு தாராதரம் கண்டுபிடிக்கும் அருமையான கருவியை நாம் இப்பொழுது அடைய வழியில்லை. ஏனென்றால் நாமெல்லாம் கவியுகப் பிராணிகள் தாமே! ஆண்டவனை நம்புவதைக் காட்டிலும் அறிவை நம்பினால்தான் பலனுண்டு என்ற மோசமான நிலைக்கு வந்துவிட்டோம். இன்று ஆண்டவனே நம்மிடம் வந்து, "அந்தச் சங்கப பலகையை உங்களுக்குத் தருகிறேன்" என்று சொன்னால்கூட "வேண்டாம்" என்று மறுத்து விடுவோம். சங்கப் பலகை உயிரோடு இருக்கிற இலக்கிய கர்த்தாக்களின் திறனைத்தான் தெளிவிக்கும். பத்துப் பாட்டிலிருந்து 'பாரதி பாட்டு' வரை, கலித் தொகையிலிருந்து 'கர்ண மகாராசன் சண்டை' வரை,

அகநானூற்றிலிருந்து 'அல்லியரசாணி மாலை' வரை நம் முன்னிலையில் புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன; சூழ்ந்து கொண்டு வருகின்றன. இந்நூல்களின் ஆசிரியர் பலர் உயிரோடில்லை. பலகையைக் கொண்டு இறந்த பாவலர்களின் திறனை எவ்வாறு தெளிந்து கொள்ளக் கூடும்!

தமிழ்மொழியிலே இலக்கிய விமரிசனத்திற்கு வரலாறு காணப்புகுந்தால், பலகை முழம் வளர்ந்த கதை, ஊமை கண்ணீர் விட்டு நூல் நயம் கண்ட கதை, வில்லி காதறுத்த கதை, தலையில் எழுத்தாணி குத்திக் கொண்ட கதை-ஆகிய இந்தக் கதை மூட்டைகளின் காலடியில்தான் விழவேண்டியவர்களாக இருக்கிறோம். இவை எப்படியானாலும் ஆகட்டும். இந்தக் கலையின் வரலாற்றை அறிய மேலோட்டமாக இலக்கியங்களைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தக் கலைஞர்கள் தங்கள் கலையின் நோக்கத்தைப் பலபலவாக விரித்துரைக்கின்றனர். 'மொழி எப்படி வளருகிறது என்பதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்கின்றனர். புத்தகச் சந்தையிலே மலைமலையாகக் குவியும் புத்தகங்களைக் கண்டு வாசகர்கள் மயங்கி நிற்பதாகவும் அவர்கள் முன் நின்று 'நல்ல புத்தகம் இது' கெட்ட புத்தகம் இது' என்று தெரிந்து கூறிவிட்டால் வாசகர்கள் பூர்ச்சையாகி விடுவார்கள் என்றும் நங்கள் திருத்தொண்டைப் பற்றி இவ்விலக்கிய விமரிசகர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் சாதனையும் அப்படித்தான இருந்து கொண்டு வந்தது? இன்று உலக மகா கவிஞர்களாகக் கருதப்படும் பல பாவலர்களின் வாழ்க்கை இக்கலையோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தது என்று பார்த்தால் நாம் ஒருவாறு அவர்கள் சாதனையின தன்மையைப புரிந்து கொள்ளலாம்.

'வேர்ட்ஸ் வொர்த்' என்னும் ஆங்கிலக் கவிஞரைப் பற்றிய ஒரு புத்தகத்தைப் படித்தேன். அதில் அவரைப

பற்றியும், அவரது கவிதைகளைப் பற்றியும் ஒவ்வொரு ஆண்டிலும் இலக்கிய விமரிசகர்கள் எப்படிக் கூறிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று காட்டப்பட்டிருக்கிறது 'ஒசை நயம இல்லை; வெறும் சொற்கூடுகள்' என்றெல்லாம விமரிசனங்கள் முதலில் கூறின பின்னர், நாள் ஆக ஆக 'இயற்கையன்னையே அவருக்காக நின்று கவிதை எழுதினாள்' என்று இலக்கிய விமரிசனத்தின் புகழ் மாலைகள விழத்தொடங்கின.

வால்ட் விட்மன் என்பவர் அமெரிக்கக் கவிஞர். அவர் கவிதைகளை, யாப்புக்குக் கட்டுப் படாமல் எழுதினார். அவரது கவிதைத் தொகுதியாகிய "புல்லிதழ்கள்" (*Leaves of grass*) 1855-ல் வெளிவந்தது. வெளிவந்தவுடன வாசகர்களின் மயக்கத்தைத் தீர்த்து வைக்கும் விமரிசகர்கள் 'அது மொழிக்கே ஆரூத தீங்கைத் தரும் வெடிகுண்டு இலக்கியம்' என்று கருதினர். பிரசாரம் செய்தனர். பலமான எதிர்ப்புக் கிடையிலே புத்தகம் விற்பனையாகிக் கொண்டுதானிருந்தது. ஆனால் இன்றைய இலக்கிய விமரிசனம் அது மீக உயர்ந்த இலக்கியம் என்று கூறுகிறது. புதுமை உடையது என்று புகலுகிறது. உலகமகா இலக்கியமாகும் திறனும், நிலைத்து நிற்கும வலிவும் அதற்குண்டென்று கூறுகிறது. 1855-ல் இருந்தது எந்தப் புத்தகமோ அதே புத்தகம்தான 1949 லும் இருக்கிறது. அதே வால்ட் விட்மன்தான ஆசிரியர். ஆனால் இலக்கிய விமரிசனங்கள் மட்டும் மாறிக்கொண்டு வந்திருக்கின்றன—இல்லை—தோல்வியடைந்து கொண்டு வந்திருக்கின்றன!

உலகத்திற்கு, இங்கிலாந்து அளித்த பெரும் பரிசாகக் கருதப்படும் ஷேக்ஸ்பியரைப்பற்றியும் இதே கதைதான். இந்த நாட்டில் பாரதியின் கதையும் இதைப் போலே! பாரதியைப் பற்றி இருபது ஆண்டுகளுக்கு முன் நிலவிய விமரிசனமும், எண்ணமும் வேறு. இப்பொழுது நிலவுவது வேறு. இனி அவரைப்பற்றி ஏற்படப் போகும் முடிவான கருத்தும் வேறுகத்தான் இருக்கும். வேண்டுதல் வேண்டாமை இரண்டும் ஒழிய, இன்னும் பல ஆண்

டுகளுக்குப் பின் பாரதிக்கு அளிக்கப்படும் இலக்கிய பீடம் எதுவோ அதுவே நிரந்தரமானது.

புத்தகங்கள் தோன்றும் காலத்தில் எழும் இலக்கிய விமர்சனங்கள் பெரும்பாலும் சரியாக இருபடுதில்லை. இலக்கிய விமரிசகர்களுக்குத் தீர்க்க தரிசனம் இருபப தில்லை! இதைத் தான இலக்கிய விமரிசனத்தின் வரலாறு காட்டுகிறது. எனவே படிப்பவன தன சொந்த அறிவையே எபபொழுதும் நம்பியிருக்க வேண்டுப. இக்கலியின் நோக்கம வாசகனின் மயககத்தைத் தீர்ப்பதாகச் சொல்லப்பட்டாலும் இக்கலியின் வரலாறு அவ்விதம கூறுவதில்லை. ஒரு காலத்திலே உதறித் தளளப பட்டவை, உருபபடாத இலகியம் எனறு கொள்ளப பட்டவை, தவறு மலிந்திருப்பதாகச் சொல்லப் பட்டவை திடீரென்று உலக மகா காவியங்களாக ஆனதெபபடி? இந்த 'ஜிவ ரகசியம்' இலக்கிய விமரிசனத்தின தோல்வியிலே அடங்கியுளளது.

காவியம் என்றும் போல் உள்ளது. அது மாறவில்லை. அன்றைக்கிருந்த அதே இலக்கியம் இன்றும இருக்கிறது, ஒனறிரணடு பாடபேதங்கள் தவிர ஆனால் அது பறறிய விமரிசனங்கள் மாறிக்கொணடே வந்திருக்கின்றன. இலக்கியம் நிலையானது. இலக்கிய விமரிசனம அழிந்துகொணடே இருப்பது. விமரிசகனின் புகழ் கால வேறுபாட்டின் கோரப பசிவைகட்கு ஆளாவதாகும. அரிஸ்டாட்டில் 'கவிதை' பற்றிக் கொணட கொளகையை இன்றைய விமரிசகர்கள் ஒப்புக் கொளவதில்லை. காலத்திற்கேற்ப விமரிசனத்தின் கொள்கைகள் மாறிக் கொணடிருப்பதால் விமரிசகர்களும் விமரிசனங்களும காலங்கடந்து நிற்க முடிவதில்லை.

இக்கலியின் வரலாற்றில் உண்மை இலக்கியங்களை மறைபபதும், போலிக்கு 'மார்கெட்' டிலே இடம் தேடிக் கொடுப்பதுப தான் வேலை யென்றாலும், இலக்கியத்திற்கு ஒரு பக்கம் இதனால் ஊட்டமும் மனித சிந்தனைக்கு விரிவும் கிடைத்து வந்திருக்கிறது என்பது என்னவோ உண்மைதான். இலக்கியத் துறையில் ஏதோ கலவரம்

இடம் பெறுவதால், கலகலப்பும் சூழப்பமும் காரணமாகக் கொஞ்ச நாள் முன்னதாகவோ, பின்னதாகவோ தெளிவும் ஏற்படுகிறது. நாடெங்கும் இலக்கிய வாதங்களை ஏற்படுத்துவதால் இலக்கியத்திற்கு வளர்ச்சி ஏற்படுகிறது.

இக்கலியின் வரலாற்றிலே சோகக்கறை படிந்திருக்கக் காரணம் உண்டு. எந்தக் கலைக்கும் தேவைப்படாத நேர்மை இதற்கு வேண்டும். வெறும் நேர்மையோடு பேசிக்கொண்டிருக்கும இலக்கிய விமரிசகன் தனக்கென ஒரு கூட்டம் அமைத்துக் கொள்ள முடியாமல் தன் எழுத்துக்களைக் குப்பைக் கூடைக்கு அனுப்ப வேண்டி வந்து விடலாம். இது காரணமாகவே ஒரு சார்பான போலி விமரிசனங்கள் நிகழுகின்றன. எனினும் நேர்மை நின்று வெல்லும். நேர்மைக்கும் மேலாகத் தீர்க்க தரிசனம் அல்லது எதிர்நோக்கும் ஆற்றல் வேண்டும். அதனினும் மேலாகப் பரந்த அறிவு வேண்டும். இலக்கியத்தை ஆக்குகிறவனுக்குப் பரந்த நூலறிவு இருக்கத்தான வேண்டுமென பதில்லை, இருந்தால் துணை செய்யும் என்பதைத் தவிர. விமரிசனுக்கோ அது இருந்தே தீரவேண்டும். பரந்த அறிவினும் மேலாக எதைப் பற்றியும் சரியான முடிவுக்கு உடனே வரும திறமை வேண்டும். இவையனைத்தும் பல விமரிசகர்களிடம் ஒருங்கே அமையாத காரணத்தால் புத்தகச் சந்தையிலே மயங்கி நின்றிருக்கும் வாசகன் மயங்கியபடியே நின்று கொண்டிருக்கிறான். மயக்கம் மூர்ச்சையானதைத் தவிரக் கண்ட பயன் ஒன்றுமில்லை.

3 அறிஞர்களும் வாழ்க்கை வரலாறும்

மக்கள், பொதுவாக உயர்ந்த பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்வதற்கு விருப்பமுடையவர்களாய் இருந்து வந்திருக்கின்றனர். சிறப்பாக அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியவர்களின் வரலாற்றை அறிவதில் தனிப்பட்ட கவனம் இருந்துவருகிறது.

ஒருவன் மற்றவனிடம் ஊர்க்கதை பேசி, ஊர்வம்பளப்பதில் என்னென்ன இடம் பெறுமோ அவைதாமும், பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றிலும் இடம் பெற்றிருக்கும்.

ஷேக்ஸ்பியருக்கு மணம் நடந்தபோது அவருக்கு வயது 18. அவரது மனைவியார் ஆன்ஹட்டாவே என்பாருக்கு வயது 26. மணம் முடிந்த ஆறாவது மாதத்தில் அவர் சூசன்னா என்ற குழந்தைக்குத் தந்தையாக வேண்டியிருந்தது.

ஜான்ஸனுடைய மனைவி அவரைக் காட்டிலும் 20 வயது மூத்தவர்.

இவைபோன்ற பல சுவையான சேதிகள் மேனாட்டு வரலாறுகளில், வழங்கி வருகின்றன. இவை தேவையானவையோ, தேவையற்றவையோ அதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை. செயற்கரிய செயலைச் செய்து காட்டிய பெருமக்கள் தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையை எவ்வெவ்வாறெல்லாம்

டத்தியிருக்கின்றனர் என்று தெரிந்துகொள்ள வேண்டுமா?

இலக்கியகர்த்தாக்கள் தங்களின் வாழ்க்கை அனுபவத்தையும் வாழ்க்கையில் ஏற்பட்ட விருப்பு வெறுப்புக்களையும் இலக்கியங்களில் உருவாக்கி வந்திருக்கின்றனர். மெய்த்திரு வந்தால் மகிழ்ந்தும், வெந்துயர் வந்தால் உளளம் நெகிழ்ந்தும் தன் சொந்த வாழ்க்கையின் துணையால் இலக்கியம் என்னும் படைப்பைச் செய்து முடித்தான கவிஞன். மேனாட்டு ஆசிரியர் தங்களின் உளள உணர்ச்சிக்கும், வாழ்க்கைச் சுழலுக்கும், வாழ்ந்த சுழலுக்கும தங்களின் நூற்களில் இடம் அளித்திருக்கின்றனர். இவற்றை அவரவர்களின வரலாற்றுடன் ஒருங்கு வைத்துக் கற்பதால் அறியமுடியும். இம் முறையையே ஆங்கிலேயர்கள் பெரிதும் விரும்பினறனர்.

பைரன் என்ற கவிஞர் இங்கிலாந்தைப்பற்றி அடிக்கடி குறை கூறி, அரசியல், சமூகம், மதம் ஆகியவற்றைக் கண்டித்தும், தம் நூல்களில் எழுதினார். இவ்வாறு அவர் எழுதுகின்ற சமைக்கு உளள சூழ்நிலையைப் பற்றிப் பலர் பலவாறு எழுதுவர். அதனுள வேடிக்கையானது ஒன்று: பைரன இரண்டாவது மணமாக நடிகை ஒருத்தியை மணந்துகொண்டார். ஒரு பெண் மகவும் பிறந்தது. ஆனால் அன்புறவு நெடுநாள் நீடிக்கவில்லை. மண மறுபுக் கோர அந்நடிகை தலைப்பட்டாள். வழக்கு மன்றத்தில் தன் கணவன் பைத்தியம் பிடித்தவர் என்று கூறினாள். ஒரு சமயம் அவரது கைக் கெடிகாரத்தை அடுப்பில் வீசி எறிந்ததையும், நிதானமான குணம் எப்பொழுதும் இல்லாமல் இருப்பதையும் சான்றுகள வழங்கினாள். வழக்கு மன்றத்தார் நன்கறிந்த கவிஞரை மூளைக்கோளாறு உடையவர் என்றே முடிவு செய்தனர்.

இதுகண்ட பைரன், தன் நாட்டார் தன்னை வேண்டும் எனறே அவமானப்படுத்தியதாக நினைத்தார். வாழப் பிடிக்காமல் சில நாள் சென்று, இத்தாலி போய்

விட்டார். இத்தகைய பல் கசப்புகளே அவரது தாய் நாட்டுப் பற்றுக் குறைந்ததற்குக் காரணம் என்றும் சொல்லுவார்கள்.

கோல்டுஸ்மித் என்னும் ஆங்கிலப் புலவர் இலக்கிய விமரிசகர்களைப் பெரிதும் தம் நூலில் கிண்டல் செய்திருக்கிறார். இதுபற்றிக் குறிப்பிடுகையில், "கோல்டுஸ்மித் தின முதல் நூல் வெளிவந்தபோது, அதைத் தாறுமாறாகத் தாக்கி அட்டகாசம் செய்ததால் தான கோல்டுஸ்மித்திற்கு விமரிசகர்களின்மேல் நிராத வஞ்சம் ஏற்பட்டது" என்று எழுதியவர் கூறுகிறார்.

இன்று நம்மிடையே வாழும் கவிஞர் பாரதிதாசன் பண்டிதர்களைப்பற்றிக் கூறவந்த இடங்களில் வித்தியற்ற சிற்சில பண்டிதரும் என்றும் தள்ளப்பண்டிதர் எனறும் 'பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக்குப் பணிக்கை' இடுகிறனர் என்றும் கைந்து கூறுவதைக் காண்கின்றோம். அவரது கவிதைகள் நாட்டில் பரவியபோது, பண்டிதர்களிற்சிலர் 'வாய்மூடி மௌனி' யானதும், சிலர் கைந்து கண்டித்ததுமே இவ்வெறுப்புக்குக் காரணமாக இருக்கும் என்று நாம் ஊகிக்க இடம் உண்டு.

நூல் எழுதுவதற்குச் சில முதற்காரணமான நிகழ்ச்சிகளே புலவர்களைத் தூண்டுகின்றன. மேலைநாட்டுக் கவிஞர்கள் தங்களின் நூல் எழக்காரணமாய் இருந்தது என்ன என்று நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர்.

கவிஞர் பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' என்னும் கவிதை நூலில் ஒரு ஆளந்தகிவி தன் இல்லம் பேணும் முறை கூறப்பட்டிருக்கிறது. "இச்சிறு நூல் எழுதத் தம் முதற் புதல்வியே காரணம்" என்று கவிஞர் சொல்லுகின்றனர். அம்மங்கையார், வீடு பேணுவதில் கருத்துள்ளவர். வெள்ளி எழத் தானும் எழுந்து, வாசல் துலக்கி, கோலம் அமைத்துத் தன மகள் நின்றிருந்த காட்சியே, சிலநாளில் 'குடும்ப விளக்காக' மலர்ந்தது.

இவ்வாறு நூல் தோன்றிக் காரணமும், அந்நூலில் போற்றுதலுக்கோ, தூற்றுதலுக்கோ ஆளானவர் கட்குப புலவனின வாழ்க்கை எவ்வளவு தூரம தொடர் புடையதாக இருக்கிறது என்பதையும் அறிய வேண்டும்.

புலவர்கள் தங்களின் கீண்பர்களாயினரையும் தம் நூலில் இடமபெறச் செய்கின்றனர். சுபபிரமணிய பாரதி யார் கபபல் ஓட்டிய தமிழனின உளளச் செருக்கை, "மேலோகக்கடல் முழுதும் கபடல் விடுவோம" என்றும் அவனது (வ. உ. சி.) துன்பத்தை ஒரு தேசிய பக்தன படும் பாடாகவும், வெள்ளாத திமிருக்கு விடையளிக்கும் பாட்டாகவும சித்தரித்துக் காட்டுகிறார். வ. உ. சி. க்கும், பாரதியாருக்கும் உளள தொடர்பை அறிந்து அப் பாடல் களைப் படித்தால் முனனியிலும் பனமடங்கு அப்பாக்கள் பல்சுவை நல்வதாகும்.

புலவர்களின் கருத்து வேறுபாடுகட்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் காரணமாக இருக்கின்றன. அருணகிரி, பட்டினத்தார் போன்றவர்கள், 'வாழ்வாவது மாயம்' 'மண்ணாவது திண்ணம்', 'பெண்ணாவது பிசாசம்' என்றெல்லாம பாடிப் போந்தனர். இவ்வாறு ஏன் பாடினர்கள்? காரணம் உண்டு: அவர்களது வாழ்க்கையும் அவர்களது நூல்களும் ஒப்ப நோக்கவேண்டும். பெண்களோடு உடற் கலபபு அதிகமாகவே, அவர்கள் நோக்காடெய்தினர். பெண் பித்தால் ஒழுக்கம் கெட்டுத் திரிந்தவர்கள்; அதனால் அவர்கள் உளளமும் உடலும் நைந்து, துன்புற்ற நிலையில் அவர்கள் பாத்த பாக்களும் அதே பிரதிபலிப்பைத் தாங்கின.

நூலாசிரியர் சொல்வது சரியா, தவரு, என்று ஆராய்வதன் முன்னர் அவர்களின் வாழ்நாள் நிகழ்ச்சிகளை ஆராய்வது சிறந்த பயனையும் தெளிவையும் தரும். சரியோ தவரோ எதையும் அவர்கள் தங்களின் வாழ்க்கை அனுபவத்தின் மூலமே முடிவு செய்கின்றனர்.

ஒவ்வொரு ஆசிரியனின் நூலைப்படிக்கப்படிக்கும் முன்னரும் பின்னரும் அவ்வாசிரியனைப்பற்றி அறிந்து ஒப்ப

நோக்குதல் ஆராய்ச்சி அறிவைப் பெருக்கும்; நல்லிசைப் புலமையும் நலகுவதாகும்.

தமிழில் அறிஞர்களின் வரலாறு தொகுக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து முதன முதலில் எடுத்துரைத்தவர் தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளையவர். அவரின் தூண்டுதலால், ந. மு. வே. நாட்டார் அவர்கள் நக்கீரர், கபிலர் என்ற நூற்களை எழுதிவெளியிட்டார். இத்துறையைத் தொடர்ந்து நல்லிசைப் புலமை மெல்லியலார்கள், புலவர் வரலாறு, இரட்டைப் புலவர் என பன போனற புத்தகங்கள வெளிவந்தன.

பழங்காலப்புலவர்களின் வரலாறு சரிவரக் கிடைக்காமல் அறியமுடியாது இருள்மூழ்கிக் கிடப்பதால், நூற்கள் பொய்யும புனைந்துரையுமாக வெளிவருகின்றன. எனவே வாழக்கை வரலாறு இருப்பதால் ஏற்படும் பயனை அவை நல்காவாயின. எடுத்துக் காட்டாக ஒன்று.

நக்கீரர் இருந்த பலிடிமண்டபத்தில் ஆனந்தக் குயவன் எனபவன் வடமொழியே சிறப்புலடையது என்றும் தமிழ் அவ்வாறு சிறப்புடையது அன்றெனறும் கூறினான். தமிழை இழித்து, வேற்றுமொழிக்கு அடிமைப்பட்ட தமிழனைக் கண்டு நக்கீரர் சினம் கொண்டார். உடனே,

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி!— அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயவன்
ஆனந்தம் சேர்க சுவாகா!"

என்று மறம்பாடக் குயவன் அங்கே இறந்து வீழ்ந்தான்.

தமிழுக்கு உள்ளத்தை நெகிழ்விக்கும் ஆற்றல் உண்டு. ஆனால் ஒரு தமிழ்ப்பாட்டைப பாடிய மாத்திரத்தாலே ஒருவன் வாழவோ, சாகவோ செய்துவிட முடியாது!

தமிழ் 'பென்ஸிலின் இன்செக்ஷ்' னுமல்ல; பாய்ஸன் (Poison) இன்செக்ஷனுமல்ல! இதுதான் தமிழ்க்கவிஞரின வாழ்க்கை நிகழ்ச்சி? இந்தக் கதையிலும் ஏதோ ஒரு உட்கிடை இருக்கத்தான்வேண்டும். இன்று சரித்திரக் கதையில் பலவற்றைப் பார்க்கிறோம். சில உண்மை நிகழ்ச்சிகளை அடித்தளமாக வைத்துக்கொண்டே கற்பனைத் தேர் நகர ஆரம்பிக்கிறது. அதைப்போலவே நக்கீரரைப்பற்றிய கதைகளும் தோன்றியிருக்கவேண்டும். அவர் ஆரியத்தினிடத்து வெறுப்புக் கொண்டவர் என்பதும் அருந்தமிழிடத்து அன்பு மிகுதியும் கொண்டவர் என்பதும் உண்மையாக இருக்கலாம்.

நக்கீரர் தமிழ் நன்கு ஆய்ந்தவர். தமிழ் நூல்களில் குற்றம் கண்டால் சொல்லாமல் விடமாட்டார். செல்வம், பகைமை, வல்லமை மூன்றுக்கும் அஞ்சாத நவைதீர் புலமை உடையார். இந்த உண்மையை ஆதாரமாக வைத்துக்கொண்டு, எவனோ ஒருவன் சிவனுக்கும் நக்கீரனுக்கும் வாதம் உண்டான கதையை உண்டாக்கியிருக்கிறான். கண்ணுதற் கடவுளே வரினும், களங்கம் கண்டவிடத்து நக்கீரன் கூறுது விடான் என்று பெருமை கொடுக்கக் கருதி அக்கதை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வரலாற்று நூல் ஆய்வோர், புராணக்கதைகளைக் கூறுவதோடு மட்டும் நில்லாது, அதன உடகிடையையும் மக்கட்குக் காட்டினால், அதனால் நிறை தமிழ்பயன் துய்க்க முடியும்.

தமிழ்ப்புலவர்களின் வரலாறு முறையாகத் தொகுத்து வரவில்லை. இக்காலத்து வல்லுநர்களின் வரலாறுகள் கூட சரியாகத் தொகுத்து உருவுடன் வெளிவரவில்லை. பத்திரிகைகளில் ஒவ்வொரு கட்டுரை வருவதோடு வாழ்க்கை வரலாறு எழுதும் முயற்சி நின்று விடுகிறது. இன்னும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, புலவர் ஏறு மறைமலை அடிகளார், மணி திருநாவுக்கரசு முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, சேசமசுந்தர பாரதி

யார் முதலியோரின் வீரச்சுக்கை வரலாறுகள் விரிவான நூல் வடிவில் வெளிவரவில்லை.

அறிஞர்களின் வாழ்வும், புரவலர் பலரின் வாழ்வும் தொகுக்கப்படவேண்டிய தேவையை இன்னும் தமிழர்கள் உணரவில்லை என்றே சொல்லவேண்டும்.

4. ரஷ்ய ஞானி

"மனமே திருமணத்தைப் பற்றி எண்ணாதே; உனக்கு வேறு வழி திறந்துவிடப் பட்டிருக்கிறது. அது மிகவும் பயன் தரக் கூடியது. உன் எதிர்கால வாழ்வு அமைதியாய் மகிழ்ச்சியாகக் கழியும்; உன்னுடன் ஒரு மனைவி இருப்பாள் என்றெல்லாம் கனவு காணாதே!.....

நான் ஒரு பைத்தியக்காரன், எனக்குக் காதலில் நம்பிக்கை இல்லை....."

இப்படித் தன் மனதில் ஏற்பட்ட குழப்பங்களை ஒவ்வொரு நாளும் ஏட்டில் குறித்துக்கொண்டு வந்தார் ஒரு மனிதர். ஆனால் அதே மனிதர் இரண்டாண்டுகள் கழித்து, தான் வெறுத்த அதே காதலுக்கு இரையாகித் தன் அக்காள் மகளை மணந்துகொள்ள வேண்டியிருந்தது.

அவர்தான் ரஷ்ய ஞானி டால்ஸ்டாய்!

ஒரு பெரிய 'எஸ்டேட்'டின் சொந்தக்காரராய்ப் பிறந்தார். ரஷ்யாவில் செல்வப் பெருமக்களைக் 'கவுண்ட்' என்றழைப்பார்கள். அப்படிப்பட்ட கவுண்டுகளில் ஒருவராகப் பிறந்து, இளைஞனாக இருக்கும்போது பட்டாளத்தில் சேர்ந்து, பின்னர் வகையற்று எழுத்தாளராக மாறவேண்டியிருந்தது. எழுதுவதைத் தொழிலாகக் கொண்டு வருவாய் தேடவேண்டிய நிலையையும் இவர் அடைந்தார்.

இளமையில் இவருக்குப் படிக்கவேண்டும் என்ற ஆசையிருந்தது. வாத்தியார் வைத்துப் படித்து, வக்

லில் வேலைக்குப் படித்து ஒரு வேலைக்கும் தகுதியாக்கிக் கொள்ளாமல் வீடு திரும்பினர். கல்லூரிப்பட்டம் ஏதாவது ஒன்று பெற்றுவிடவேண்டும் என்று எத்தனை முறை முயன்றாரோ அத்தனை முறையும் தோல்வியுற்றார். வசதிகள் யாவும் இருந்தும், பெற்றோர்களால் கல்லூரிக்கு அனுப்பப்பட்டிருந்தும் டால்ஸ்டாயின சகோதரர்களில் யாரும் பட்டம் பெறாமலேயே திரும்பினர். டால்ஸ்டாய் தன் இளமைக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் இவ்வாறு கூறுகிறார்:—முதல் அண்ணன் படித்தார்—படிப்பு வந்தது; இரண்டாவது அண்ணன் படித்தால்—படிப்பு வரும்: மூன்றாவது அண்ணன் படிக்க விரும்பினர்—படிப்பு வரவில்லை. இந்த டால்ஸ்டாய் இரண்டும் செய்யவில்லை!

இவருடைய பதினைந்தாவது வயதில் ரூஸ்ஸோ போன்ற அறிஞர்களின் நூல்களைப் படித்தார். ரூஸோவிடம் இவர் நல்ல மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். அவருடைய வசனங்களில் பலவற்றை ஒரு எழுதாத் தவறாமல் மனப்பாடம் செய்து வைத்திருந்தாராம். நூலறிவு இளமையிலே கொண்டிருந்தும் சிந்திக்கும் திறமை இருந்தும் இவர் ஒரு காவலி செய்யும் வேலை அனைத்தையும் செய்திருக்கிறார். சூதாடுவது கெடுதி, என்று இவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தும், பலபேர் எடுத்துரைத்தும் அவர் சீட்டாடும் வழக்கத்தை விட முடியவில்லை. இரவு பகலாகச் சில சமயங்களில் சீட்டாடுவதுண்டாம். ஒரு சமயம், இரண்டே நாளில் பத்தாயிரம் ரூபாய்களுக்குமேல் தோற்றாராம். சீட்டாட்டம் இவரைக் கடனகாரர்கள் கையில் சிக்க வைத்தது:

பின்னர் போர் வீரராகச் சேர்ந்து சண்டைக்குச் சென்றார். போரால் மக்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் என்பதனை உணர்ந்தார். அமைதியினைபால் அவருக்கு அப்போது ஆசை பிறந்தது.

போரிலிருந்து திரும்பி வந்ததும், இவருடைய அடங்காத இளமைக்கும், உடல்வெறிக்கும் உணவு தேடவேண்

டியிருந்தது. திருமணம் ஆகுமுன்னமேயே அதன் பயனை மறைவான வழிகளில் தேடுவாராயினர்.

ஒரு சமயம் ஒரு குடியானப்பெண் இவருடைய நிலத்திலே தனியாக வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்க்க நேரிட்டது. அடங்காத இளமை வெறி, அந்த இளம் பெண்ணின் தனிமையைக் காணச் சகிக்க வில்லை. அருகில் இழுத்துச் செல்லப்பட்டார். அன்று தொட்ட தொடர்பு, அந்தக் குடியானப் பெண்ணுக்குக் கணவனில்லாமல், திருமணமாகாமல், 'புத்திர பாக்கியத்தை'க் கொடுத்தது. களங்கக் காதலால் பிறந்த அந்தக் குழந்தை பிஞ்சுளில் டால்ஸ்டாயின் ஒரு குழந்தைக்கு வண்டிக்காரனாக ஆயிற்றும்.

பிறவியில் டால்ஸ்டாயின் புதல்வனாகப் பிறந்தும், ஒரு செல்வனின் மகனாகத் தோன்றியும், வண்டிக்காரனாக ஆகவேண்டியிருந்தது.

சமுதாயத்தின் அங்கீகாரம் பெறாமல் பிறந்த குழந்தை எப்படிச் சரிசிகராக வாழமுடியும்? டால்ஸ்டாய் இதை நினைத்து என்றேனும் வருந்தியிருக்கத்தான் வேண்டும். தான் பெற்ற குழந்தைகளில் ஒன்று மட்டும் வண்டிக்காரனாகவும், மற்றவை முதலாளியாகவும் ஆக வேண்டியிருந்ததை அவர் நினைத்திருப்பார். இவர் தன் குழந்தைகளுக்குக் கற்பித்த மூதற் பாடம் பணியாட்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதுதானோ! பணியாட்களை ஆணையிடவே கூடாதென்றும் அவர்களிடம் எதையும் கேட்டே பெறவேண்டும் என்றும் கூறுவாராம்.

திருமண நாள் நிச்சயித்தபின், டால்ஸ்டாய் 'வரப்போகும் மனைவியிடம்' தன் இளமைக்கால நிகழ்ச்சிகள் அடங்கிய நாட் குறிப்பை எடுத்துக்கொடுத்தார். ஆசையுடன் வாங்கிப்படித்த அந்த அம்மையார் அன்று இரவு முழுதும் தூங்கவே இல்லை. விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார்களாம். தான் இன்னும் இரண்டொரு நாளில் மணந்துகொள்ளப்போகும் மணவாளனின் உண்மையான ஒழுக்கத்தின் வடிவங்களை அவள் கண்ணுற்றதும்

மிகவும் கலங்கினாள். புண்பட்டுக் கிடந்தாள். ஆனால் உண்மைக்கும் நேர்மைக்கும் டால்ஸ்டாய் மதிப்பளிக்கிறவர் எனபதை அறிந்து தன்னை ஒருவாறு தேற்றிக் கொண்டாள்.

போர் வீரராகத் திரும்பி வந்தபின் சில பத்திரிகைகளுக்கு எழுதினார். இவருடைய முதல் கட்டுரையை வெளியிட்ட இதழாசிரியர், இவருடைய எழுத்தை மிகவும் பாராட்டி எழுதியிருந்தார். அந்த ஊக்க உரை வீண் போகாமல் ரஷ்ய இலக்கியத்தின் மகுடத்தை அவருக்குக் கொடுக்கும்படி செய்தது. அந்த ஆசிரியர் டால்ஸ்டாய்க்குப் பணம் ஒன்றும் கொடுப்பதில்லையாம். ஆனால் ஆரம்ப எழுத்தாளர் என்பதற்காகத் தன்னிடம் பணம் வாங்காமல் இருந்தாரே என்பதற்காகவாவது, டால்ஸ்டாய் மகிழ்ந்திருக்க வேண்டும், எழுத்தில் ஆர்வம் கொண்டு தொடர்ந்து பத்திரிகைகளுக்கு எழுதி வந்தார். தான எழுத்தாளர் என்ற மன அமைதி பெற்றதும், ஒரு பத்திரிகாசிரியராக வேண்டும் என்று வழக்கமாக எல்லோரும் விரும்புவார்கள். அந்த அசட்டுத் தனமான எண்ணத்திற்கு டால்ஸ்டாயும் ஆளானார். காரில் ஏறிச் செல்வோன் கார் ஓட்ட ஆசைப்படுவதுபோல, டால்ஸ்டாய் பத்திரிகை ஒன்று ஆரம்பித்தார். பத்திரிகை நிர்வாகம் எல்லோரும் நினைப்பதுபோல் எளிதல்ல என்பதை உணர்ந்தார். எழுத்தாளராக இருந்து பத்திரிகாசிரியராக ஆன தண்டத்திற்கு 8000 ரூபாய்க்கு மேல் நட்டங்கொடுத்துப் பரிகாரம் செய்துகொண்டார் சந்தாதாரர்கள் மிகவும் குறைவு, படிப்பவர்களும் கொஞ்சம், காசு கொடுத்து அவ்வப்போது வாங்குபவர்கள் ஒன்றிரண்டு பேர். இங்கிலீஷில் இவர் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தமுடியவில்லை. 12 இதழ்களுடன் அவருடைய பத்திரிகை தன் வாழ்நாளை முடித்துக்கொண்டது.

பிஞ்சுப் பள்ளிக்கூடம் ஒன்று வைத்து நடத்திப் பார்த்தார். தன் நிலங்களைப் பேணுவதற்குப் பெரும் பொழுது செலவிடவேண்டியிருந்தது.

இப்படிப் பல அனுபவங்களுக்கும் கிகிலக்களனை ஒரு பெரிய தத்துவஞானி ஆயினர். ரஷ்யநாடும் இந்த உலகமும் தன்னை எப்போதும் மறந்துவிட முடியாதபடி இலக்கியப்பணி ஆற்றித் தன் வாழ்நாளின் முற்றுப்புள்ளியை மிதித்தார்.

5. சிறுகதை ஆசிரியர் மாபஸான்

1

'கற்பு, 'கற்பு' என்று பேசிக் கொண்டிருந்த நேரத்திலே பிரஞ்சு நாட்டிலே, நம்மிய கணவனோ மோசம் செய்த நாரீமணிகளைப்பற்றி ஒருவன் எழுதிக் கொண்டிருந்தான். தெய்வீகக் காதல், தூய காதல் என்று எழுத்தாளர்கள் வர்ணித்துக் கொண்டிருந்த போது அவன் 'விபசாரம்—விபசாரிகள்' இவர்களைப்பற்றி வரைந்து கொண்டிருந்தான்.

அவன் பெயர்தான் கய் டி மாபஸான் (*Guy de Maupassant*) பிரஞ்சுக்காரனான மாபஸான் நம் போன்ற நாட்டவருக்கு மிகவும் புரட்சிகரமானவனாகவே தென்படுகிறான். அவனுடைய கதை உறுப்பினர்கள் மக்களிலே கீழ்க் கடையாக மதிக்கப் படுகிறவர்களாயும், ஒழுக்கச் சீர்கேடுடையவர்களாயுமே காணப்படுகிறார்கள்.

அவன் வர்ணிக்கும் பல ஆபாசமான சித்திரங்கள் பிரஞ்சு நாட்டில் சர்வ சாதாரணமாகக் காணக் கூடியவைகளே! மாபஸான் தான் வாழ்ந்த சூழ்நிலையிலேயே தனக்கு வேண்டிய விஷயங்களை எடுத்துக் கொண்டான். அவனுடைய கதைகள் எந்த நீதியையும் போதிக்க வந்தவை அல்ல; ஆனால் அவை நாட்டின் நிலை இன்னதென்று காட்டக் கூடியவை. பல்வேறு விதப்பட்ட வாழ்க்கை வழமுறைகளையும், ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள 'இயபாவ சம்பந்தத்'தையும், பல்வேறு வகைப்பட்ட உள்ளக் கோணங்களையும் அவனுடைய கதைகள்

பேசின. பலர் கைவைத்தால் மதிப்புக் குறைவு என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த விஷயங்களில் அவன கைவைத்துக் காட்டினான். அதில் கவர்ச்சி இருந்தது. நயமும் நாசூக்கும் இருந்தன. திரை மறைவில் நடந்து கொண்டிருந்த பல காட்சிகளைக் காட்டினான். ஆனால் திரை இழுக்கப் படவில்லை. அதில் பிரஞ்சு நாட்டுக்கேற்ற பக்குவமும் நாகரிகமும் இருந்தன.

எனினும் 18-ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் இருந்த ஒழுக்க நூல் வல்லார்கள் அவன புத்தகங்களை மிகவும் கடிந்துரைத்தனர். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும இவன் புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டபோது பெரிதும் கண்டிக்கப்பட்டன; 'எழுதத் தகாத ஆபாசங்களை வர்ணித் தெழுதுகிறவன்' என்று அலட்சியமாகக் கூறினர்.

மாபஸான்

ஆபாசமான விஷயங்களை வர்ணிப்பதால் பிரஞ்சு காட்டுப் பொதுமக்களிடம் இவனுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. பாரிஸிலே 'ஒழுக்கம்' என்பது 'கனவுலகச் சரக்காக' வே இருந்தது. புத்தகத்தை எழுதுவது அங்கே சர்வசாதாரணம். அதை இல்லாவிட்டால் ஒரு புத்தகமும் விற்பனையாகாது.

சிறப்பாக மாபஸானிடம் இனிக்க இனிக்கக் கதை சொல்லும் திறமை இருந்தது. எடுத்த ஆபாசமான

தைக் கீழவைக்காமல் புடிக்கும்படியாக அவன் புத்தகங்கள் இருந்தன. இதனால் அவனுடைய கதைகளுக்கு 'மார்க்கெட்டிலே' கல்ல கிராக்கி ஏற்பட்டது. பத்திரிகை ஆசிரியர்கள் வரி ஒன்றுக்கு ஒரு பிராங்க் வீதம் விலை கொடுத்துக் கதைகள பெற்றனர். இங்கிலாந்தில் இவனது புத்தகங்கள நிறைய விலையாயின.

நாள் ஆக ஆக அறிஞர்களிற் பலரும் சுவைப்புத்தன்மையோடு படித்துப் பார்க்க ஆரம்பித்தனர். எல்லா விஷயங்களையும் எழுதினன். துணிச்சலாக எழுதினன். பிரஞ்சு நாட்டில் எனனென்ன கண்டானோ, எனனென்ன கேட்டானோ அவையெல்லாம் அவனுடைய கைத்திறமையில் உருவம பெற்றன. அவனிடம அலுப்புத்தட்டாமல் கதை சொல்லும் வன்மை இருந்தது. கதைகளுக் கிடையே 'குட்டி லெக்சர்'கள் அடிப்பதில்லை. எளிமை இருந்தது. வாசகர்களில் நூற்றுக்கு நூறுபேரும் கதையின உட்பொருளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவனுடைய கதைகளுக்கு யாதொரு விதமான விளக்கங்களும் தேவைப்படுவதில்லை. அவைதான் அவனது வெற்றியின ரகசியங்களாக அமைந்தன.

∴ ∴ ∴

ஒரு குமாஸ்தா அவனுடைய இளம் மனைவியுடன் மிக மகிழ்ச்சியாகக் குடும்பம நடத்துகிறான. அவர்கள் ஒருவருக் கொருவர் மிக அன்போடு கலந்து பழகுகின்றனர். அவனது மனைவிக்கு வைர நகைகள அணிவதெனறால் விருப்பம் அதிகம். அவன் ஏழைக் குமாஸ்தாதானே. பேசலி வைரங்கள் சில வாங்கி அணிவிக்கிறான. அவள் விருப்பத்திற்கு மாறாக அவன ஒன்றும் செய்வதில்லை. அவளைத் தனியாகவே சினிமா, நாடகம முதலிய களியாட்டங்களுக்குப் போக அனுமதிக்கிறான.

அவள் திடீரென்று ஒருநாள் இறந்து விடுகிறான. 'ஓ' என்று கதறுகிறான். ஏக்கமுற்று வாடுகிறான். அவள் நினைவாகவே பல நாள் கழிகிறது.

பின் ஒருகால் அவனுக்குப் பணமுடை வந்தபோது தன் மனைவியின போலி வைரங்களை விற்றுக் கடைக்குக் கொண்டு போகிறான். 10 அல்லது 15 ரூபாய்க் பெறுமானம் தான் இருக்கும் என்று கருதுகிறான். கடைக்காரன் வாங்கிப் பார்த்து 13 ஆயிரத்திற்கு மேல் மதிக்கிறான். அவனுக்குத் திடீரென்று மயக்கம் வருது விடும் போல் இருக்கிறது. எதிர்பாராத ஆச்சரியம் ஒரு பக்கம். திகைப்பு ஒரு பக்கம். இவற்றிலை ஏற்பட்ட குழப்பம். "இவ்வளவு விலை உயர்ந்த நகை தன மனைவிக்கு எப்படிக் கிடைத்திருக்கும்?" என்ற கேள்வி அவனைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தது. அவன் வாங்கிக் கொடுத்த போலி வைரங்களை தாமே அடுத்த கடைக்குள் நுழை கிறான். அதைவிட அதிகமாகவே விலை மதிக்கப் பெறுகிறது. திரும்பி வீட்டிற்கு வருகிறான். அதிர்ஷ்டம் வந்ததற்காக அவன் கும்மாளம் அடிக்கவில்லை. அதிர்ஷ்டம் ஒரு சூறாவளிக் காற்றையும் உடனழைத்துக் கொண்டு வந்திருந்தது. "உயர்ந்த வைர நகையைத் தன் மனைவி எப்படிப் பெற்றிருப்பாள்?" என்ற கேள்விக்கு அவனால் மறுமொழி காண முடியவில்லை. மயக்கம் போட்டு விழுந்து விடுகிறான். மறுநாள் வருகிறான். தன மனைவியின அவ்வளவு நகையையும் விற்கிறான். அவனிடம் நிறையப் பணம் சேர்ந்து விட்டது. கடைக்காரன் வாங்கும் போது, "யாரோ தான் சம்பாதித்ததை யெல்லாம் வைரமாக வாங்கி வைத்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறான்.

கடைக்காரன் சொன்ன சொற்றொடரைப் பன்முறை சொல்லிப் பார்க்கிறான். "சம்பாதித்தது....."

அவனுக்குத் தெரியாமல் அவன் மனைவி என்ன வியாபாரம் செய்திருப்பாள்? அவ்வளவு ரகசியமாக ஒரு பெண்ணால் என்ன வியாபாரம் செய்ய முடியும்———"

யாரிடம் தன் உள்ளம் முழுவதையும் ஒப்படைத் திருந்தானோ, யார் இறந்ததற்காகத் தேம்பித் தேம்பி அழுதானோ அவள் இப்படி ஒரு 'துரோகி'யாக இருந்திருக்கிறாளா! அதை நினைக்கும் போது அவன் மனம் என்ன பாடுபடும் என்று எண்ணும் போது அவன் நிலை

பரிதாபகரமாகவே இருக்கிறது. அவளை அவன் இப் பொழுது என்ன செய்ய முடியும்?

எந்தப் பெண்ணை நம்ப முடிகிறது? எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ?

இது மாபஸானின் போலி வைரங்கள் (*False gems*) என்ற ஒரு சிறுகதையின் சுருக்கம். இத்தோடு இந்தக் கதையை மாபஸான் முடித்திருக்கலாம். ஆனால் மேலும் சில வரிகளை மேலும் எழுதுகிறான்.

"ஆறு மாதங்களுக்குப் பிறகு அவன் இரண்டாவது மணம் செய்து கொண்டான். அவனது இரண்டாவது மனைவி ஒழுக்கத்தினின்று எள்ளளவும் தவறாதவள். அவளால் அவனுக்குத் துன்பமே மிகுந்தது"

உண்மைதானே! அவனது முதல் மனைவி இருக்கும் போதும் நன்மையே செய்தாள். இறந்தபோதும் 'பொற் குவியலை'க் காட்டி விட்டுத்தானே சென்றாள்.

முதல் மனைவி ஒழுக்கம் கெட்டவளாகவும், நம்பிய கணவனை மோசம் செய்தவளாகவும் இருந்தாலும் ஆசிரியரின் இரக்கமும் ஆதரவும் அவள் பக்கமே இருக்கிறது. "கயமையாகவும் கீழ்த்தரமான ஒழுக்க முடையவர்களாகவும் வருகிற கதாபாத்திரங்களே மாபஸானின் ஆதரவைப் பெறுகின்றன" என்று டால்ஸ்டாய் குறைகூறுவது இங்கே நாம் நோக்கத்தக்கது.

கற்பு—ஒழுக்கம் இவை தவறாத பெண்ணால் துன்பமே அடைந்தான் என்று வலிந்து மாபஸான் எழுத வேண்டிய காரணம் என்ன? கற்பு முதலியவற்றில் அவன் நம்பிக்கை கொள்ளவில்லை. அது அவனுக்கு ஆதாரமற்றதாகவே பட்டிருக்க வேண்டும். ஆனால் 'விபசாரம் பாபமானது' என்பதை அவன் மறுக்க விரும்பவில்லை. அதே நேரத்தில் அது 'வசதியானது' என்றும் கூறிக் கொள்ளுகிறான்.

"கல்யாணமே வேண்டாம், பெண்களெல்லாம் பொதுவுடமைச் சொத்துக்கள்" என்ற பிளேட்டோவின தீவிர பொதுவுடைமையை இவன் மனமார ஆதரிக்கிறான.

● . ●

இன்னொரு கதை

பிரானீஸா நகரின் அழகுத்தேவதை என்ற கதையில் ஒரு யூதப் பாதிரியின் மனைவியைப்பற்றி எழுதுகிறான. அவருடைய பெருமை, அவருடைய கடவுள் பக்தியிலே இல்லை; அவருடைய ஒழுக்கத்திலே இல்லை; அவருடைய கற்று மேம்பட்ட அறிவிலே இல்லை; ஒரு அழகான இளம பெண்ணுக்குக் கணவனாக இருக்கிறோம் என்பதிலிருந்தது. அந்த யூதப் பாதிரி தன நேரத்தைப் புத்தகங்கள படிப்பதிலும சிந்தனை செய்வதிலும செலவிட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய மனைவியைத் திருப்திப் படுத்த அவரால் இயலவும் இல்லை; அதற்காக அவர் முயலவும் இல்லை. அவள் மனங் கசந்து போகிறாள். விதிச் சன்னலிலேயே பார்த்தபடி இருப்பாள்.

ஒரு நாள் அந்த ஞானியிடம் "கிருஸ்து எப்பொழுது மறுபடியும் பிறப்பார்?" என்று கேட்டாள். அதற்கு அவர், "எப்பொழுது யூதர்கள் அனைவரும் பாபிகளாகவோ புண்ணியவான்களாகவோ மாறுகிறார்களோ அப்பொழுது கிருஸ்து பிறப்பார்" என்ற பைபிள் வாசகத்தை எடுத்துரைக்கிறார். அவள், "எல்லோரும் எப்படிப் புண்ணியவான்களாக முடியும். அது இயலாது. பாபிகளாக ஆவதுதான் இயலக் கூடியது" என்கிறாள்.

ஒரு நாள் பாதிரி வேற்றூர் சென்றிருந்தார். அப்பொழுது அவரது மனைவி ஒரு கடற் படைத் தலைவனோடு சேர்ந்து தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறாள். எதிர்பாராமல் திரும்பி வந்துவிட்ட பாதிரி விஷயம் தெரியவே மிகவும் கொதிப்படைகிறார். "என்ன பாபம்? என்ன கொடுமை? என்ன துரோகம்!" என்று அவர் கதறுகிறார். அதற்கு அவள் பயப்படவே

இல்லை துணிச்சலாகவே மறுமொழியளிக்கிறாள், அதுவும், கிண்டலாகவும் கையாண்டியாகவும் இருக்கிறது. "கிறிஸ்து பிறக்க வேண்டாமா? அதற்கு எனனால் ஆன காரியத்தை நான் செய்து முடித்தேன்" என்று சொல்லுகிறாள்.

ஆகவும் பாபிமாலுல் ஆண்டவன் பிறப்பான்: ஆண்டவன் பிறக்கவேண்டும்; அதற்கான திருத்தொண்டை அவள் செய்து முடித்ததாகச் சொல்லும் போது அந்தக் கதாபாத்திரத்தின் துடுக்கான பேச்சையும் அதனினும் மேலாக ஆசிரியரின் குறும்பையும் நாம் உணர்கிறோம்.

பாதிரியிடமே கேள்வி கேட்டு அவரிடமே மறுமொழியை வாங்கி சரியான நேரத்தில் ஆளைத் திருப்பி அடிக்கிறாள். பெண்ணின் மறுமொழியிலுதான் கதையின் உயிரும் சுவாரஸ்யமும் இருக்கின்றன. அந்த மறுமொழி இல்லாவிட்டால் கதையில் ஒன்றுமில்லை- மாபஸானின் கதைகளில் பல இப்படிக் குயுக்தியான முடிவுகளாலேயே சிறப்பையும் கவர்ச்சியையும் அடைகின்றன.

பைபிள் வாசகத்திற்கு மாபஸானின் கதை விமரிசனம் எனனுயிருக்கிறது!

○

தமிழ் நாட்டின் சிறந்த சிறு கதையாசிரியரான புதுமைபித்தன் மாபஸான் கதைகளை விரும்பிப் படிப்பதுண்டு. மாபஸானைப்பற்றி அவர் அடிக்கடி புகழ்ந்து கூறுவதுண்டென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமயம் வ. ரா. வும் புதுமைபித்தனும் ரயில் பயணம் செய்தனர். ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. சாப்பிடவேண்டிய நேரம். புதுமைப்பித்தனிடம் பணம் இல்லை. வ. ரா. விடம் இரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு சாப்பிடச் சென்றார். சென்றவர் திரும்பி வரும்போது

ஒரு புத்தகத்துடன் வந்தார். அந்தப் புத்தகத்தைப் பார்த்ததும், ஏன் 'சாப்பிடவில்லையா?" என்று வ. ரா. கேட்டார். அவர் புத்தகத்தைக் காட்டினார். அது மாபஸானின் சிறுகதைகளாக இருந்தது. சாப்பாட்டை விடப் புதுமைப்பித்தனுக்கு மாபஸான் கதைகளில் பிடித்தம் உண்டு. இந்தஇகழ்ச்சியை வ. ரா. புதுமைப்பித்தனைப்பற்றி எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"கற்பு கற்பு என்று கதறுகிறீர்களே; இது தானய்யா பொன்னகரம்" என்ற புதுமைப்பித்தனின் வரிகள் தமிழ் நாடு முழுதும் அறிந்தவை. புதுமைப்பித்தன் கதைகளைப் படிப்பவர்கள் இந்த வரிகளை ரஸிக்க மறப்பதில்லை. அதில் உள்ள துணிச்சலுக்காகத்தான் அவை பாராட்டப் பெறுகின்றன. இந்தத் துணிச்சல் மாபஸான் கதைகளைப் படித்ததனால்தான் உண்டாகியிருக்க வேண்டும். ஒழுக்கம்—கற்பு இவற்றை மனிதன் குங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தால், துணைக் கேணியில் அமிழ்ந்து கிடக்க வேண்டியதுதான் என்று மாபஸான் நினைக்கிறவன் ஆயிற்றே!

ரஷ்ய அறிஞர் லியா டால்ஸ்டாயும் இவனுடைய கதைகளைப் படித்த துண்டு இவனுடைய கதைகளில் சிலவற்றைத் தழுவி ரஷ்ய மொழியில் அவர் கதைகள் எழுதியிருக்கிறார். மாபஸானின் கதைத் தொகுதி ரஷ்ய மொழியில் வெளிவந்தபோது, அதில் மாபஸானைப்பற்றி ஏறக்குறைய 25 பக்கங்களுக்கு மேற்கொண்ட முன்னுரை ஒன்றை எழுதியிருக்கிறார். அதில் அவன் நாவல்களைப் பற்றி விமரிசனமும் செய்கிறார். டால்ஸ்டாய் இவனைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், பிறமைக்கு மெச்சியும் எழுதிச் செல்கிறார். இவனுடைய சிறுகதைகளைத்தான டால்ஸ்டாய் பெரிதும் மதிக்கிறார். நாவல்களைக் குறைபாடுடையனவாகவே கருதுகிறார். சேம்பர்ஸ் வரலாற்று அகராதியினர் மாபஸானின் உண்மையான புகழ் அவனது நாவல்களினால்தான் கிடைக்கக் கூடும் என்கின்றனர்.

இவனுக்குச் சிறுகதை உலகம் ஒரு நிரந்தரமான இடத்தைக் கொடுப்பதிலே பெருமை உடைத்தாகவே இருக்கிறது எனபதை யாரும் மறுக்க முடியாது.

சிறுகதை ஆசிரியர் மாபஸான்

2

"இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படித்துப் பாருங்களேன்" என்று டால்ஸ்டாயிடம் ரஷ்யக் கவிஞர் இவான் துர்கானேவ் ஒரு பிரஞ்சுப் புத்தகத்தைக் கொடுத்தார்.

"என்ன அவ்வளவு உயர்ந்த புத்தகமா?" என்றார் டால்ஸ்டாய்.

"பரவாயில்லை. படிக்கலாம். இந்த ஆசிரியர் உங்களைப்பற்றி மிக உயர்வாக நினைத்துகொண்டிருக்கிறார்" என்று சொன்னார் கவிஞர்.

கொடுக்கப்பட்டது மாபஸானின் சிறுகதைப் புத்தகம். கொடுத்தவர் மாபஸானின் நண்பர் ரஷ்ய நாட்டின் சிறந்த கவிஞர், உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர். அப்பொழுது மாபஸானுக்கு வயது முப்பத்தொன்று; டால்ஸ்டாய்க்கு வயது ஐம்பத்து மூன்று.

டால்ஸ்டாய், இவான் துர்கானேவ் சொன்னதற்காக இரண்டொரு கதைகளைப் படித்துவிட்டுப் போட்டுவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகுதான அதைத் தொட்டார். அப்பொழுதுதான் மாபஸானிடம் திறமையிருக்கிறது என்பதை உணர்ந்தார். தன் மனத்தைக் கவர வல்ல பல கதைகள் அதிலே இருக்கக் கண்டார். ஒரு குழந்தை 'தன் அப்பா யார்?' என்று கேட்கின்ற கதை (*Simons' papa*)யை அவர் பெரிதும் சுவைத்தார். மாபஸான் சுவறும் பேர்பெற்ற எழுத்தாளன் மட்டுமல்ல; திறமையுள்ள எழுத்தாளனும் கூட என்பதை அறிந்

தார். அவனுடைய நாவல் எல்லாவற்றையும் படித்தார். ஆனால் எல்லாவற்றையும் குறை கூறினார். மாபஸானின் சிறுகதைகளை ரசித்த அளவுக்கு அவர் அவனது நாவல்களை ரசிக்கவில்லை; அல்லது அவரால் ரசிக்க முடியவில்லை. ஒரே ஒரு நாவலை அவர் பெரிதும் போற்றினார்: 'யுனிவீ' (Une vie) என்னும் அவனது முதல் நாவல்தான் அது. பெண்ணின் வாழ்க்கையைப்பற்றிக் கூறியது அந்நாவல். விக்டர் ஹ்யூகோ எழுதிய 'ஏழைபடும்பாடு' எனற நாவலுக்குப் பினனர் வெளிவந்த பிரஞ்சு நாவல்களில் இந்த 'யுனிவீ' என்ற நாவல் தலைசிறந்ததாகும் என்று அவர் சொல்லுகிறார்.

○

தருமம் பல சமயங்களில் இவனுடைய நாவலில் தோற்று விடுகிறது. காரணம் 'இந்த உலகம் அத்தகையது. இங்கே தர்மத்திற்கு வெற்றியில்லை' என்று மாபஸான் கருதியிருக்கவேண்டும். ஒரு கதையையோ, அல்லது ஒரு நாவலையோ படிக்கும்போது, அந்த ஆசிரியர் எந்தக் கதாபாத்திரங்களுக்குச் சார்பாகவும் இரக்கமுள்ளவராகவும் வருகிறார் எனபதை நாம் எளிதில் கண்டுபிடித்துக் கொள்ளலாம். மாபஸான் சில சமயம் அநியாயத்திற்குச் சார்பும் ஆதரவும் காட்டினான்; அவனிடம் சரியான நிதானம் இல்லை.

"மாபஸான் நன்மை எனபது என்ன? தீமை என்பது எனன? என்று சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அவனிடம் நிதானம் இல்லை. அதர்மத்திற்கு வக்கீலாக இருக்கிறான். அவனது பல கதைகளில் அதர்மம் வெல்லுகிறது" என்று டால்ஸ்டாய் இதை நோக்கியே குறிப்பிடுகிறார். இவனது நாவல்களைப்பற்றி அவர் விமரிசனம் செய்யும்போது, "இந்தக் கடைசி நாவலில் கூட உறுப்பினர்கள் முரடர்களாகவும், ஒழுங்கற்றவர்களாகவும், காவாலிகளாகவும் இருக்கிறார்கள். இந்தக் கொடியர்களின் குறிக்கோளுக்கு ஆசிரியர் இரக்கமும் ஆதரவும் காட்டுபவராகக் காணப்படுகிறார்! 'இன்பம் எனபது உடலாசைப் பூர்த்தி' என்ற ஒன்றைத்தான் இந்த நாவலி

லிருந்து தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது" என்று எழுதுகிறார்.

டால்ஸ்டாய் மாபஸானைப்பற்றி எழுதுகிற அனைத்தையும் ஏற்றுக்கொண்டால் மாபஸானிடம் நாம் நெருங்க முடியாது; டால்ஸ்டாயின கலைக் கண்ணோடு பார்த்தால் மாபஸானை ரஸிக்க முடியாது.

○

மனித வாழ்க்கையை இரண்டு கூறுகப் பகுக்கலாம். ஒன்று மனிதன் மனிதனாக வாழ்வது; மற்றொன்று மனிதன் மிருக வாழ்க்கை வாழ்வது. இரண்டும் கலக்காமல் வாழ்க்கை இல்லை; உலகம் இல்லை. மனிதன் மிருக வாழ்க்கை நடத்தும்போது மிருகத்திற்கும் அவனுக்கும் வேற்றுமை இல்லை. மனிதனும் ஒரு சிரிக்கும் மிருகம்தானே! பகுத்தறிவு, ஒழுக்கம இந்தக் கண்கொண்டு பார்த்தால் மிருக வாழ்க்கை ஊழல் மலிந்ததாகவே படும். உலகம் ஊழல் இல்லாமல் இருக்கிறதா? ஒழுக்கம் அறிவு இரண்டையும், மனிதன் வசதி, தேவை, என்பனவற்றிற்குப் பலியிட்டுவிடுகிறான். மாபஸான மனிதனின் மிருக வாழ்க்கையைத் தன்னுடைய கதைகளில் காட்டியுள்ளான். ஆர்தர் சைமன்ஸ் சொல்லுவது போல, "மாபஸான் நமதுடைய இயற்கைக்கு மிருக உணர்ச்சிதான் அடிப்படை என்று கண்டான். மனிதனின் மிருகப் பகுதியை (*Animal side of the man*) அவன் கதைகளில் வர்ணித்தான். எடுத்துக்கொண்ட விஷயத்தை, இவ்வளவு விஷய ஞானத்துடன் கவர்ச்சிபட வேறு எந்த எழுத்தாளனும் சித்தரித்ததில்லை."

○

இவனுடைய கதைகளில் பலரின் கோபத்திற்கும் நிந்தனைக்கும் ஆளாகாத கதைகளும் உண்டு.

ஒருவன் தன் தங்கையைச் சிறு வயதில் விட்டுப் பிரிந்து கடற் படையில் சேருகிறான். பல ஆண்டுகள்

கழித்துத் தாய்நாட்டுக்குத் திரும்புகிறான். தன் தங்கை என்ன ஆனாள், எப்படி இருக்கிறாள் என்பதொன்றும் தெரியாது. கப்பலிலிட்டு இறங்கியதும் ஒரு விபசார விடுதியிலே அந்த இரவைக் கழிக்கின்றான். கடற்படையினர் அனைவரும் ஆனந்தமாகக் குடிக்கின்றனர். ஆடுகின்றனர். பாடுகின்றனர். ஒவ்வொருவனும் ஒவ்வொரு விலைமாதோடு திரிகிறான். அவனும் ஒருத்தியின் மடியிலே படுத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறான். பேச்சின் இடையிலே அவன திடீரென்று வெறி பிடித்ததுபோல் எழுந்து பக்கத்திலிருந்த மேசையைத் தள்ளிவிட்டு நொறுக்குகிறான். மதுக்கிண்ணத்தைக் கீழே விட்டெறிகிறான். அங்குமிங்கும் ஓடினான்.

ஆம். யார் மடியில் படுத்திருந்தானோ அவள்தான் அவனுடைய தங்கை என்று தெரிந்துகொண்டதுதான் காரணம். கீழேவிழுந்து புரண்டான். ஒவ்வொருவனிடமும் ஓடி 'என் தங்கை' 'என் தங்கை' என்றுகத்துகிறான். அவனது தோழர்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகக் கருதுகிறார்கள். ஒருவன் ஒருத்தியை அப்பொழுதுதான் முத்தமிடப் போனான். உடனே அவன் ஓடி அவனை ஒரு குத்துவிட்டுக் கீழே தள்ளினான். "இங்கே இருக்கிற ஒவ்வொரு விபசாரியும் யாராவது ஒருவனுடைய தங்கையாகத்தானே இருப்பாள்" என்று கேட்டுக்கொண்டே ஓடுகிறான்.

இந்தக் கதையைத் தழுவி ரஷ்யமொழியில் டால்ஸ்டாய் எழுதியிருக்கிறார்.

○

ஒரு பள்ளிக்கூடத்து ஆசிரியனைப் பற்றி (*Moiron*) கதை.

அந்த ஆசிரியனுக்குக் குழந்தைகளின்மேல் அதிகமான வாஞ்சையிருந்தது. ஆனால் அந்தக் குழந்தைகள் எதிர்பாராதவிதமாக ஒன்றன்பின் ஒன்றாக இறந்துவிடுகின்றன. எழை ஆசிரியரின் மனம் பெரிதும் உடைந்துவிடு

கிறது. கடவுளே வைகிறான். உலகத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையையும் கொன்றுவிட விரும்புகிறான். தன்னுடைய பள்ளிக்கூடத்திலே படித்த குழந்தைகளில் ஏழு குழந்தைகளுக்குத் தின்பண்டம் கொடுத்தான். அந்தத் தின பண்டத்தில் கண்ணாடித்துகள்களை கலந்துவிட்டான், யாருக்கும் தெரியாமல் குழந்தைகளைக் கொலை செய்துகொண்டு வருகிறான்.

ஊராரும் போலீசாரும் அந்த ஆசிரியன் மீது எள்ளளவும் சந்தேகப்படவில்லை. ஏழை ஆசிரியன்தானே என்று நினைத்தனர். ஆனால் பயங்கரமான ராட்சஸ வேலை நடந்துகொண்டுதானிருந்தது.

மனிதன் எப்படித் திடீரென்று ராட்சதனாக மாறி விடுகிறான் என்பதை இக்கதை காட்டுகிறது. சாதுவாகத் தூய வாழ்வை நடத்திக் கொண்டிருந்த கதா பாத்திரம் ஒரு பயங்கரமான நச்சுக் கொடுக்காக மாறுகிறது.

○

மாபஸானின் முப்பதாவது வயதை அவனது இலக்கியப் புகழின் உச்சிக்காலம் என்று சொல்லலாம். பத்திரிகாசிரியர்கள் அவனை வளைத்துக் கொண்டனர். அவனைப் படிப்பதற்கென்று பலர் தயாராகி விட்டனர். பத்திரிகாசிரியர்கள் வழக்கம்போல் தங்கள் நிதானத்தையும் விமரிசன நோக்கையும் இழந்து விட்டார்கள். அவனுடைய கதைகளை மெச்சிப் பலர் கடிதம் எழுதினர். பலர் வீட்டிற்கு வந்தே பேசிக் கொண்டிருந்தனர். நேரில் சென்று இலக்கிய ரசனை செய்தவர்களில் முக்கியமாகப் பிரஞ்சு நகரத்துப் பெண்மணிகளைக் குறிப்பிட வேண்டும். எத்தனையோ பெண்கள் வருவார்கள்; தனியாக வருவார்கள். தனியாகப் போவார்கள். தங்கள் கணவன்மார்களுடன் வந்து பார்த்துச் செல்லும் பெண்களும் உண்டு.

மாபஸானின் அழகான பேர்வழி. அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். இதனால் பெண்கள் அவன் வசியில் எளிதில் சிக்கினர், இவனுடைய 'சமத்துவ' நோக்கில் கன்னிப்

பெண்ணுக்கும் குடும்பப் பெண்ணுக்கும் எந்தவித வேற்றுமையும் இருந்ததில்லை.

அவனுடைய கதைகள் அவனது சொந்த வாழ்க்கையிலிருந்தே எழுந்தவையாயிருக்கவேண்டும் என்றுவாலஸ் பிராக்வே (*Wallace Brockway*) ஐயப்படுவதை எண்ணிப் பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம்.

அவன் துர்கானேவிடம் தன் சொந்த வாழ்க்கை அனுபவத்தையும் மறைக்காமல் சொல்வதுண்டு. இன்றைக்கு இந்தப் பெண்ணைப் பார்த்தேன்; அந்தப் பெண்ணோடு பேசினேன் என்று சொல்வான். பெரும்பாலும் பெண்களைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பான்.

பிளாபர்ட் (*Flaubert*) என்னும் பிரஞ்சு நாவலாசிரியர் இவனுடைய பேச்சைக் கேட்கும் போதும், இவனுடைய கதைகள், படிக்கப் படும்போதும் விழுந்து விழுந்து சிரிப்பார். நடை, கதை சொல்லும் முறை ஆகியவற்றை மாபஸான் பிளாபர்ட்டிடமிருந்தே கற்றுக் கொண்டான.

மாபஸான் முதன் முதலில் இலக்கிய உலகில் ஒரு இளங் கவிஞன் என்ற முறையிலேயே காலடி எடுத்து வைத்தான். பிரஞ்சு மொழியில் பல தனி நிலைப் பாடல்கள் எழுதியிருக்கிறான். அவனது முதல் புத்தகம் ஒரு கவிதைத் தொகுதிதான். நாள் போக்கிலே, பிளாபர்ட், துர்கானேவ் ஆகியவர்களிடம் கொண்ட நட்பும், எமிலி சோலா முதலியவர்களின் நாவல்களைப் படிக்கும் விருப்பும் அவனைச் சிறுகதைகள் எழுதத் தூண்டின. அவன் ஒரு ஆரம்ப எழுத்தாளனாக இருக்கும் போது பிளாபர்ட்டிடம் தன் சிறுகதைகளைக் காட்டினான். ஒரு புகழ் பெற்ற ஆசிரியர் ஒரு ஆரம்ப எழுத்தாளனிடம் எப்படி நடந்து கொள்வது வழக்கமோ அப்படியே பிளாபர்ட் மாபஸானிடம் நடந்து கொண்டார். ஆனால் சில ஆண்டுகளில் தன் இள நண்பனிடம் தனித்திறமை இருப்பதைத் தெரிந்து கொண்டு ஊக்கமளித்தார்.

○

மாபஸான் சுமார் 300 சிறுகதைகள் எழுதியிருக்கிறான். பல நாவல்கள் எழுதியிருக்கிறான். இவனுடைய

நாவல்கள் இன்னும் தமிழில் மொழி பெயர்க்கப்பட வில்லை. சுமார் 25 கதைகள் மட்டும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவனுக்கு நிர்ணயமான கொள்கை ஏதும் இல்லை; கலை கலைக்காகவே என்றும் அவன் நினைக்க வில்லை. கலை பிரசாரத்திற்காக என்றும் நினைக்க வில்லை. ஒரு வேளை கலை என்பது 'கொக்கோக சாம்ராஜ்யத்திலே ஓடக்கூடிய தேர் என்று அவன் கருதி யிருக்கலாம்.

மாபஸாங்கைப் பற்றி ஒரு பிரஞ்சுப் பேராசிரியர் எழு தும் போது 'அவனுடைய காலம மலையேறி விட்டது; பத்திரிகைகளில் இரண்டொரு பத்தியை நிரப்புவதற் காக அவன் எழுதிக் கொண்டிருந்தான்' என்று குறிப் பிடுகிறார். இது அவ்வளவு நேர்மையான விமரிசனம் இல்லை. மாபஸானின் தனித் திறமையும் (Originality) துணிச்சலும் கதையை முடிக்கும பாணியும் அவனுக்குச் சிறு கதையுலகில் நிரந்தரமான புகழைக் கொடுக்கத் தவறமாட்டா. இளமையும், இந்த உலகத்தினின்று ஆண—பெண் என்கின்ற உணர்ச்சியும், அதனால் ஏற் படும் ஊழல்களும் எப்பொழுது தொலைகின்றனவோ அப்பொழுது அவனுடைய கதைகளும் மதிப்பற்றுத் தொலைந்து விடும். அவனுக்கு எதைப் பற்றியும் ஒரு நிர்க்கமான கருத்து இல்லாமலிருப்பது குறித்துச் சில விமரிசகர்கள், 'அவனது வாழ்வின் இறுதியில் வந்த மூக்காக் கோளாறு அவன் கதைகளில் தெனபட்டது' என்று கையாண்டி செய்வர்.

○

மாபஸான் 42 ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்தான். பிரஞ்சு நாட்டிலே நார்மானியப் பகுதியிலே அவன் பிறந்தான். அவன் படிப்பு முடிந்ததும் போர் வீரனாகச் சேர்ந்தான். போர் முடிந்ததும் குமாஸ்தா வேலை பார்த் தான. அவனுக்கு அந்த இயந்திர வேலையிலே மனம் செல்லவில்லை. இலக்கிய விஷயங்கள் பேசுகின்ற இடத் திற்கு அவன் அடிக்கடி சென்று விடுவான். எமிலி சோலா, பிளாபர்ட், துர்கானேவ் முதலியவர்களிடம்

அவன் கொண்ட பழக்கம் அவனை மேம்படச் செய்தது. அவன், தங்கள் வட்டாரத்திலே உலாவுவதில் அந்த எழுத்தாளர்கள் மிகவும் மகிழ்வடைந்தனர்.

மாபஸானுக்கு அதிகமான செல்வாக்கிருந்தது; அதிகமான வருமானம் இருந்தது. ஆனால் அதே நேரத்தில் வரவை விட இரண்டு பங்கு செலவிருந்தது. செலவுக்குரிய பணத்தை அவனது எழுத்துத்தான கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் அவனது பேனா அவன் வாழ்வின் இறுதிக் காலத்தில் இரவும பகலும ஓய்வில்லாமல் தாளில் ஊர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சொட்டு மையையும் அவன் பல ஆயிரம் பிராங்குகளாக ஆக்க முயற்சித்தான். அவனுடைய கடுமையான உழைப்பும், கொஞ்சநேரம் கூட மன நிம்மதியின்றிக் கதைகளுக்கு விஷயம் தேடிக் கொண்டிருந்ததும் அவனுக்கு மூளைக் கோளாறை உண்டாக்கின.

1891-ம் ஆண்டு அவன் ஒரு தனிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டான். பிறகு அவனுக்குப் பைத்தியம் தெளியவே இல்லை. பைத்தியம் பிடித்த ஒரே ஆண்டில் இறந்து விட்டான்.

'மாபஸான் இப்படிப் பைத்தியமாகச் செத்தானே' என்று நினைத்த வாசகர்கள் அவனது வாழ்வின் சோகரசமான இறுதி அத்தியாயத்தை இரண்டு சொட்டுக் கண்ணீருடன படித்து முடித்தனர்.

மாபஸானின் அன்னை அவன் மேல் மிக அதிகமான வாஞ்சை வைத்திருந்தாள். தான் இறக்கும் போது "என் மகனைப் பார்ப்பதற்காகவே விண்ணுலகம் போகிறேன்" என்று சொன்னாளாம்.

6. இலக்கியத்தில் காதல்

அந்தக் காலத்தில் ஒரு அரசனைப்பற்றியோ, அன்றி உயர்குடித்தோன்றலைப்பற்றியோ எழுதுவதுதான இலக்கியம் என்று நினைத்தார்கள். ஏழைஎளியவர்களிடம காதல்உண்டான கதையைப் பற்றியும், ஊடல் உண்டான கதையைப்பற்றியும் கவிதை எழுதினால், நமது முன்னோர் கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். காப்பியத்திற்கு இலக் கணம் வகுத்த தண்டியாசிரியரும், தன்னிகரில்லாத்தலைவனை யுடைத்தாய் எனறும் நன்மணம் புணர்தல் போன்றது கவித்தல் என்றும் கூறுவாராயினர். உலாவுக்கு இலக்கணம் வகுத் தார் ஒங்குயர் சிறப்பின் ஒருவனைப் பாடப் பயன்பட வேண் டும் எனக் கூறினர்.

இலக்கியம் என்ற சாதனம் மனித இனத்தில் உயர்ந்தவனைப் புகழ்வதற்காகத்தான் ஏற்பட்டது என்று கருதின முன்னோர்கள் உண்டு. புலவன வயிறு வளர்க்கவும், நாகரிகமான மொழியில் கூறினால் பாடிப் பரிசில் பெறவுமே இலக்கியம் சாதனமாயிருந்தது.

இலக்கியத்தின் தலைவனுக்கு இலக்கணம் கண்ட நம் முன்னோர்கள் இலக்கியத்தில் காதல் முறை எவ் வாறு இருக்கவேண்டும் என்ற கேள்வியையும் அன்ற தங்களுக்குள் எழுப்பிக்கொண்டு, அதற்குப் பொருள் இலக்கணமும் கண்டு சென்றனர்.

பொருளிலக்கணம் எந்த மொழியிலும் இல்லாத ஒன்று எனக்கூறி மகிழ்வார்கள். காதலன காதலி சந்திப பதும், கூடுவதும், ஊடல் கொள்வதும், பிரிந்தபோவ தும் எவ்வாறு என்று வகுத்தும் இதாகுத்தும் பொருளி லக்கணம் கூறுகிறது. காதல் படலத்தைத் தலைவன

தான் துவக்கி வைப்பான். தலைவி முதலில் காதல் வேட்டையைத் துவக்க "லைசன்ஸ்" கிடையாது. மாணவனாக இருப்பவன் காதலியை நினைத்து வருந்தினாலும் அதைப் பற்றி எழுதப் புலவனுக்கு உரிமை கிடையாது. களவுப் புணர்ச்சிக் காலத்தில், பெற்றோர்க்குத் தெரியாமல் தலைவனுடன் தலைவி புணர்ந்து அதனால் கருத்தாங்குவது உண்டென்றாலும், அதனால் தலைவனும் தலைவியும் ஊருக்குப் பயந்தும் பெற்றோர்க்குப் பயந்தும் நடுங்குவது உண்டென்றாலும், அதைப்பற்றி விவரிக்கப் புலவனுக்கு அனுமதி கிடையாது.

இவ்வாறு பல விஷயங்கள் அந்தக் காலத்தில், புலவனின் கற்பனை விரிவைத் தடைப்படுத்தின. இலக்கணங்கள் புலவனின் திறமையை, ஒரே பாதையில், ஆட்டுமந்தையை ஓட்டுவதுபோல, செலுத்தி ஆண்டு கொண்டிருந்தன.

இன்றைய இலக்கிய கர்த்தாக்கள் அவ்வாறில்லை. நேற்றைய உலகமும் இன்றைய உலகமும் நடப்பு முறையில் பல மாறுபாடுகளைப் பெற்று விளங்கிருக்கின்றன. நாளும் நடப்பும் மாறிக்கொண்டே இருக்கின்றன.

கலித்தொகைக் காலத்துத் தலைவனை நாம் இப்போது காணமுடியாது. வயற்புறங்களிலே, நெய்தற்புனங்களிலே, வேட்டைக்குப்போன சமயங்களில் அவன் காதலியைக் கண்டான். 'மான் வந்ததா? மயில் வந்ததா?' என்று கேட்டான்.

இப்பொழுதோ காதல் நிகழ்ச்சிக்குரிய இடம் இதுதான் என்று கூற முடியாது. ஜெனரல் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், ரயில்வே ஸ்டேஷன், சினிமாக்கொட்டகை, அத்தனை இடமும் அத்தனை நிகழ்ச்சிக்கும் உரியன. காதலன் சந்திக்கும்போது இப்படித்தான் கேட்க வேண்டும், இன்ன கருபொருள், இன்ன உரிப்பொருள் கூறவேண்டும் என்று கவிஞனின் தாலி அறுபடுவதில்லை!

அந்தக் காலத்துத் தலைவிக்கு கீர் குடைந்தாடுதலும், பூப்பறித்தலும், ஆயத்தோடு விளையாடுதலும் தாம வேலைகளாக இருந்தன. இருந்தன என்று சொல்லக் கூடாது. இலக்கணம் அப்படிப்பட்ட தலைவியரைத் தான் காட்டவேண்டும் என்று கூறிற்று. புகைவண்டி நிலையத்தில் டிக்கட் கொடுக்கும் தலைவி, டிக்கட் வாங்கும் தலைவன், கல்லூரிக்கு நாளொரு மேனியும் மணிக்கொரு 'டிரஸ்' ஸுமாக வரும் தலைவி, பார்வைக்கு ஏங்கி ஏங்கிப் பாடத்தை மறந்திருக்கும் தலைவன், திருமணமாகாமல் மாணவர்களைப் பார்த்துப் பார்த்து விம்மிக் கிடக்கும் வாத்தியாரம்மா, இப்படிப்பட்ட பல திறப்பட்ட தலைவர் தலைவியர்களை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்; கதைகளில் படிக்கிறோம்.

தண்டமிழ் தந்த பொருளிலக்கணம் இன்று நமக்குத் தாத்தாவின் சட்டையாகி விட்டது. "சட்டைத்துணி எவ்வளவு அழகாக இருக்கிறது? ஆகா!" என்று அவை லாய்த்துக் கொண்டிருக்கும் ஆராய்ச்சிக்காரர்களை பற்றியோ, பண்டித சிகாமணிகளைப்பற்றியோ கவலையில்லை.

இலக்கியத்தின் நோக்கம் இன்று படிப்படியாக விரிவடைந்திருக்கிறது. இந்த உலகத்தின் ஒவ்வொரு அங்கமும் இலக்கியத்தில் இடம்பெற உரியதாகி விட்டது. இன்று இலக்கியத்தை மகாப்புனிதமான சாதனம என்று நாம் கொள்ளத் தயாராக இல்லை. ஜான் மாஸ்பீல்டு என்னும் ஆங்கிலேயர் சொல்வது போல இலக்கியம் என்பது ஒரு கை விளக்கு. அது காட்டும் வெளிச்சத்தில் மனிதன இந்த உலகத்தின் பல நிகழ்ச்சித் திரங்களையும் காண்கின்றான். தான் வாழும் உலகினில், மனிதரின் பலவகைப்பட்ட பண்பு, அன்றன்றூடம் நடக்கும் நிகழ்ச்சிகள் ஆகிய யாவற்றையும் அவ் விளக்கு பாகுபாடின்றிக் காட்டுகிறது. பணக்காரன புரளும் ஆறு அடி அழகான மெத்தையிலிருந்து பஞ்சை படுக்துறங்கும் ஆலமரத்தடிவரை நாம் அந்த வெளிச்சத்தில் பார்க்கிறோம்! பதுங்கிக்கிடக்கும் திருடன், ஏமாற்றியே பிழைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்ததிற்கு ஆளாகிய

கயவன், மனித இனம் அழியாமல் இருப்பதற்காக ஏற்பட்ட அங்கத்தை விலைகூறும் வியாபாரி, உடற்பசியால் மிருகமாகித் திரியும் மனிதன் ஆகிய அனைவரும் அந்த வெளிச்சத்தில் சமபங்குடையவர்கள்!

சிலர் ஆபாசமான விஷயங்கள் இலக்கியத்தில் அங்கம் பெறக்கூடாது என்பர். என்னைக் கேட்டால் இலக்கியத்திற்கு 'இது வேண்டும் இது வேண்டாம்' என்று ஒன்றையும் ஒதுக்கித் தள்ளக்கூடாது என்பேன்.

இந்தப் பிரச்னை நெடுங்காலமாகவே இருந்து வந்திருக்கிறது. ஆதாரவில்லாமலேயே இருந்து வருகிறது. அகப்பொருள இலக்கணம் ஆபாசத்திற்கு இடம் கொடுக்காமல் இல்லை. குறிஞ்சித்திணையின் ஒழுக்கம் 'புணர்தலும் புணர்தல் நிமித்தமும்' ஆகும். 'ஆபாச' வாதிகள் தங்களின் கருத்துக்களை இந்தத் திணையில் புகுத்துதல் எளிது. ஆனால் கலித்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு போன்ற நூற்களில் புணர்ச்சிபற்றி விவரிக்கும் கவிதைகளைப் பெரும்பாலும் காணமுடியவில்லை. புணர்ச்சி நிமித்தமான நிகழ்ச்சிகளே விவரிக்கப்படுகின்றன. இதைக்கொண்டு அந்தக் காலத்தில் ஆபாசமாகப் பாடுவதை எல்லாப் புலவர்களும் ஒருமுகமாக வெறுத்தனர் என்று கொள்ளவேண்டுவதில்லை. எனெனில் இன்றைக்கிருக்கும் அகநூற்கள் யாவும் தொகுக்கப்பட்ட நூற்களாகவே இருக்கின்றன. தொகுத்தவர்கள் ஆபாசமாகப்பாடுவதை வெறுத்தவர்களாக இருக்கலாம். அக்காலத்தில் ஐங்குறுநூறு ஒழுக்கத்திற்கு ஒவ்வாத நூற்களை 'பெருந்திணை' மருங்கில் சேர்த்தனர். பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் பற்றிக்கூறும் நூற்களாம். இவ்வாறு பெருந்திணை என்ற சொல்லை அகப்பொருளிலக்கணத்தில் நாம் காண்பதிலிருந்து, [illegible] உடைத்தெறிந்த புலவர்கள் இருந்தார்கள் என்பதை அறிகிறோம். ஆனால் பெருந்திணை நூற்கள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. காரணம் அவற்றிற்குப் பெரும்பாலோரின் ஆதரவு இல்லாததேயாகும். பெருந்திணை நூற்களைச் சேர்த்தும், எட்டிலிருந்து ஏடு தெரிந்து எழுதியும் வைத்துக் காப்பாற்றவில்லை. அவை ரகசியமாகவே பிறந்து ரகசியமாகவே அழிந்திருக்கலாம்.

சங்ககாலம் நீங்கி, இடைக்காலத்தில் இருந்த புலவர் கள் ஆபாசமாகப் பாடுவதில் தனி விருப்பமும், கருத்தும் காட்டினர். இடைக்காலத்துக் காவிய மன்னன் கம்பனே யும், தனிப்பாடல் புலவர் காளமேகத்தையும் இவர் களுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

ஆபாசம் என்றால் என்ன? இந்த உலகம் மனிதனின் சில நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடாது, சொல்லக் கூடாது எழுதக் கூடாது என்று மறைத்துத் தடைச் சட்டம் போட்டு வைத்திருக்கிறது. அதை உடைத்தெறிந்தால் அது ஆபாசம் என்ற பெயரின் கீழ் வந்து விடுகிறது.

நாகரிகமான இலக்கிய கர்த்தாக்களும் நேரடியாக அந்த நிகழ்ச்சிகளைச் சொல்லா விட்டாலும் பருந்தைப் போலச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக் கின்றனர்.

நினைக்கிறோம்; சொல்லுகிறோம்; செய்கிறோம்; கேட்கி றோம்; அப்படியிருக்க அதைப் பற்றி எழுதினால் என்ன கெட்டுப் போய்விடும்? பெரிய ஆராய்ச்சிக்காரன்—பத்திரி கைசிரியன்—ஆயிரக்கணக்கான மக்கள் மாலை சூட்ட உலாவரும் அரசியல் அறிஞன்—இப்படி எத்தனையோ சிறப்புடைய அறிவறிந்த மக்கள் பள்ளியறையில் என்ன செய்வதென்றத் தெரியாமல் திண்டாடுகிறார்கள்! அத்தனை மயக்கம்! அவ்வளவு வெறி! சிறிதாக எரியும் சுடருக் கெதிரில், விரித்துக் கிடக்கும் மெத்தையில்பொன் னுடை நெகிழ்ந்து கிடக்கும் போது, அவன் தன்னை மறந்து விடுகிறான். வெறி அவனை ஆட்கொள்ளுகிறது. என்ன செய்வதென்றத் தெரியவில்லை! இந்தப் பரிதாப நிலைமையைச் சித்தரிக்க ஒரு எழுத்தாளன் நினைத்தால் அது ஆபாசக் களஞ்சியம்!

அறிஞன் ஆபாசம் என்று கருதப்படுகிற சித்தி ரத்தை விவரிக்கும் போது நாகரிகமான முறையிலேயே விவரிக்கிறான். தெருவில் திரியும் காவாலியும் ஆபாச மான சொற்களைக் கூறிக்கொண்டு திரிகிறான். இளமைத் துடுக்கு மிகும்போது, கல்லூரி மாணவன் இப்படிப்பட்ட

சொற்களைச் சொல்லுவதிலேயும் கேட்பதிலேயும் இன்பம் கொள்ளுகிறது. அறிஞனும் தன் உடல் பாதிப்பினாலோ அன்றி மற்ற காரணங்களினாலோ ஆபாசமாக மூதுவது ஆச்சரியமாகத்தான் இருக்கலாம். ஆனால் அறிவாளியிடமிருந்து வரும் ஆபாசச் சித்திரம் அறிவுடன் கலந்து ஐக்கியப் பட்டே வெளிவருகிறது. அறிவோடு கலந்து உருவாகும் ஆபாச இலக்கியத்திற்குப் பத்தாயிரவர் உள்ள மேடை இடம் கொடாவிட்டாலும்பத்துப்பேருள்ள தனியறை விரும்பி வரவேற்றுக் கொள்ளுகிறது. சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு மனிதனும் ரகசியமாகப் படித்து விடுகிறான்.

மறைவான இகழ்ச்சிகளை நேரடியான சொற்களால் அழைப்பதற்கு ஆபாசவாதிகளும்விரும்புவதில்லை. ஆனால் குறிப்பால் அவற்றைச் சொல்லாமல் இருப்பதில்லை. எப்படியெனில் மெல்லிய உடையுடுத்துத் தன்னுடலைக் காட்டாது காட்டிவரும் மங்கையின் நிலைதான் அவர்கள் போக்குக்கு உவமையாகும்.

ஆபாசப் பாட்டுக்கள் என்று எதைத் தள்ளுவீரோ அது மற்ற குப்பை இலக்கியங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகவே இருக்கும். சில தினங்கட்கு முன்னர் நாட்டுப்பாடல் சேகரிப்பு ஒன்று தமிழ் நாட்டில் நடந்து அவற்றில் சேராத பல பாடல்களை நான கேட்டிருக்கிறேன். நிறைய இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை உட்கிடையாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் பெரும்பாலன 'ஆபாசம்' என்று கருதப்படுகின்றன. அவற்றைச் சேர்த்து அச்சேற்ற உள்ளத்திடமில்லாமல் விட்டு விட்டனர். ஆபாசத்தை அச்சேற்றுவதால் உலகம் கெட்டுவிடும் என்று நினைப்பது வீண் பயங்கொள்ளித்தனம். இந்த உலகத்தில் இல்லாதவற்றையா எழுத்தாளன் எழுதுகிறான்? சாக்கடையை விளக்கேற்றிக் காட்டுகிறான் எழுத்தாளன்: சாக்கடையைக் காட்டுவதற்காக, விளக்குப் பிடிப்பவனை நோவதா? 'சாக்கடையைச் சீர்திருத்த ஏதாவது வழி ஏற்படாதா?' என்றல்லவா நினைக்க வேண்டும்!

ஓடும் ஆற்றையும், உயர்ந்த மலையையும், ஆடும் பெண்ணையும் வர்ணித்துக் கொண்டிருப்பவர்கள் வர்ணித்துக் கொண்டிருக்கட்டும். புரையோடிய புண்ணைப் பிளந்து காட்டும் மருத்துவ எழுத்தாளர்கள் தேவை. ஏழை படும் பாட்டை எழுதுவதோடு, இருட்டு நேரத்தில் உடற்பசியால் வெறி பிடித்துத் திரியும் மனிதன் படும் பாட்டையும் எழுதவேண்டும்.

விபரீதக் காதல் பொருந்தாக் காமம், என்பன போன்றவற்றையும் விலக்கக் கூடாது. மூத்தவள் சிறுவனைத் தேடுவது, அண்ணன் மனைவிக்கும் தம்பிக்கும் ஏற்படும் உறவு, சிற்றன்னைக்கும் மகனுக்கும் ஏற்படும் அனைத்தும் சித்தரிக்கப் படவேண்டிய நிகழ்ச்சிகளே! எழுத்தாளனின் கற்பனையா இவை?

இலக்கிய கர்த்தா ஒரு வானம்பாடி. அந்த வானம்பாடி பறக்கும் வான் வெளியிலே, அகப்பொருளிலக்கணம், புறப்பொருள் இலக்கணம், ஆபாசம் என்ற தடைக்கற்கள் தோன்றுவதில்லை.

உள்ளத்தோடு ஒட்டும்படியான காதற் சித்திரங்கள் அனைத்தையும் அவன் படம் பிடிக்க நினைக்கிறான். உலகத்தில் காதல் நிகழ்ச்சிகள் எவ்வெவ்வாறு நடக்கின்றனவோ, திரைமறைவில் நடந்தாலும் சரி, வெளியில் நடந்தாலும் சரி, அவ்வவ்வாறே காதல் நிகழ்ச்சிகள் இலக்கியத்திலும் சித்தரிக்கப்படவேண்டும்!

7. கற்பனைகள்

கவிஞன் ஒரு பத்திரிகை நிருபனல்ல; வரலாற்றுகிரியனும் அல்ல. கவிதை என்பது மொழி, உணர்ச்சி, நிகழ்ச்சி, கற்பனை, உவமை ஆகிய இவைகளின் கூட்டுச் சரக்கு. வரலாற்றிலே கற்பனையைக் கலந்தால் அது விகற்பமாகி விடுகிறது. பத்திரிகை நிருபன் செய்தியில் கற்பனைத் திறமையைக் காட்டினால் அது கேலிக் கூத்தாகி விடுகிறது. பொது வாழ்க்கையிலே, தான் வாழ வேண்டும் என்ற மனிதன் உண்டாக்குகின்ற கற்பனை பொய்யென்ற போலும், பித்தலாட்டம் என்ற போலும் உலாவுகிறது. பலர் இன்புறுவதற்கென்றே செய்யப்படும் கற்பனை 'கவிதை' என்று பெயர் பெறுகிறது; பெரும் புகழுக் குரியதாகிறது.

∴ ∴ ∴

கற்பனைக்கு ஓர் எல்லை உண்டு; அந்த எல்லை இன்னதுதான் என்று என்னால் வரையறுக்க முடியாது. ஆனால் நான் இதைச் சொல்லமுடியும். உலகியலில் காணப்படும் விஷயங்களுக்கு அப்பால் போகாமல், ஓரளவு உண்மையின் அடிப்படையிலே குறிக்கோளை மறவாமல் எழும் கற்பனைகள் பெரிதும் மக்களால் ரசிக்கப்படுகின்றன. அவற்றிற்குத்தான் உள்ளத்தோடும் ஒட்டி உறவாடும் திறமை இருக்கிறது.

நெடுநல்வாடையிலே ஒரு கற்பனை ஓவியம்:

வாடைக்காலம். மிகக் குளிருகிறது. பெண்கள் பலர் கூடியிருக்கின்றனர். இரவு நேரம். ஆண்மக்களை அனைவரும் சண்டையின் நிமித்தமாக அவர்களைப் பிரிந்து

சென்றிருக்கின்றனர். பெண்களுக்கோ, காதலரைப் பிரிந்த ஏக்கம், கனலை அவர்கள் உடம்பில் மூட்டுகிறது. பிரிவுத் துயரை நீக்கியிருக்கச் சிலர் ஆடுகின்றனர் சிலர் பாடுகின்றனர். சிலர் அவற்றிற்கேற்ப யாழ் எடுத்து மீட்டுகின்றனர். குளிர்ந்தடிக்கும் வாடையிலே அந்த யாழ் நரம்புகள் குளிர்ந்துபோய் விடுகின்றன. ஒலி எழ வல்லை. எண்ணுகின்றனர். திடீரென்று வழிகண்டது போல் மங்கையர்கள் தம் மார்பகத்தே அந்தக் கோட்டி யாழ்களை அப்படியே அணைத்துக் கொள்கின்றனர். கொங்கையிலே இருந்த வெப்பம் அந்த யாழ் நரம்பு களுக்குச் சூடேற்றி விடுகின்றது. திரும்பவும் யாழ் வாசிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

இது கற்பனை, நடந்ததில்லை, ஆனால் நடக்கக் கூடி யது. கவிஞன் உலகத்தில் கண்ட பொருள்களை விட்டு அப்பால் போய்விடவில்லை. சொல்ல வந்த எலும்புக் கூட்டை வைத்துக்கொண்டு அழகான 'சோடிப்பு' வேலை நடத்தி இருக்கிறான். 'குளிர்ந்த நரம்புகளை அவர்கள் எப் படிச் சூடேற்றினர்.' என்று நினைக்கும்போது, நமக்கு ஒரு வகை நகையும், மகிழ்வும் உண்டாகின்றன. அதே நேரத் தில் கவிஞனின் சிறு குறும்பும் புலப்படாமல் போக வில்லை.

இது அர்த்தமுள்ள கற்பனை. ஆடவரைப் பிரிந் திருந்த பெண்கள் காம வெப்பத்திற்கு ஆட்பட்டிருக்கின்ற னர், வாடைக்காலம், மிகக்குளிருகிறது. இம் மூன்றையும் ஒருங்கே காட்டுகிறது கற்பனை. இதுதான் உள்ளர்த்தம், அல்லது கற்பனையின் குறிப்பு.

கம்பனிடத்திலே இதுபோன்ற மற்றொரு கற்பனை.

அசோக வனத்திலே வருந்திக் கொண்டிருக்கும் சீதையைப் பற்றிச் சொல்லும் அவன் சீதையின் சோலை யைப் பற்றிச் சொல்லுகிறான். சோலை நன்கு வளர்வதும் காய்வது மாக இருக்கிறது என நினைக்கிறான். எப்படி நினைக்கிறது, எப்படிக் காய்கிறது, என்று கம்பன் சொல்வது கவிதையாகிறது. சீதை ராமனை நினைத்து அசோக வனத்திலே வருந்திக் கொண்டிருக்கிறாள். அதனால் அவளுடைய உடம்பில் வெப்பம் மிகைப்படுகிறது. அதே நேரத்தில் இராவணன்

ஆட்சிக்குள் இருக்கும் அவலம் நினைந்து அழுகிறாள். அழும் கண்ணீரானது அவளுடைய சேலையை நனைத்து விடுகிறது. ஈரமாகப்போன சேலை அவளுடைய உடம்பிலே இருக்கிற வெப்பத்தால் உலர்ந்து விடுகிறது.

இப்படி நனைவதும் உலர்வதுமாய் இருக்கிறது அந்தச் சேலை!

இன்னுயிர்த் துணைவனை நினைத்து ஏக்கம் ஒரு பக்கம்—எதிரியை நினைத்து அச்சம் ஒரு பக்கம்—இவ்விரண்டையும் ஒருங்கு காட்டுவது கற்பனையின் குறிப்பு.

இவ்விரண்டு கற்பனைகளும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டன. உலகிலே காணக்கூடிய பொருள்களை வைத்துக்கொண்டு கற்பனைகளைக் கவிஞர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு கற்பனைக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. அல்லது ஏதோ ஓர் உள்ளர்த்தம் உண்டு. அந்த உட்கிடையை அப்படியே சொல்லிவிட்டாலும் சுவையில்லை. அந்தக் குறிப்பை வைத்துக்கொண்டு சுற்றி வளைத்து 'அண்டப்புளுகு' ஆக்கினாலும் சுவையில்லை. உயர்வு நவிற்சி என்று சொல்லிக்கொண்டு ஒன்றுக்கு நூறுக்கி, ஆயிரமாக்கி நவின்றால் மனிதன் அத்தகைய கற்பனைகளிலே விரைவில் சலிப்படைந்து விடுகிறான்.

ஒரு மதில்!

அது அடி நோக்கிவளர்ந்து கொண்டே போய் ஆதி சேடன் தலைமேல் அமர்ந்ததாம். மதிலின் மேற்பாகம் மேல் நோக்கி வளர்ந்து போய் வானத்தை முட்டிற்றும். சூரியன் பார்த்துத் திண்டாடிப்போனானும். எந்த வழியில் போவது என்று மயங்கி, போக வழியில்லாமல் அதே இடத்தில் நின்றுவிட்டானும். மதிற்கதவு திறந்ததுகண்டு அதிற்புகுந்து போனானும்.

இது ஒரு கற்பனை. மதில் பெரியது என்று சொல்ல வேண்டிய குறிக்கோள் எங்கெங்கேயோ சுற்றி வளைந்து கதையாகியிருக்கிறது. கற்பனைக்குரிய எல்லையை மீறி, இயற்கையின அடிப்படையைவிட்டு நெகிழ்ந்திருக்கிறது.

ஒரு மீன் துள்ளி விளையாடிற்றும்: அது துள்ளியெழுந்த வேகத்தில் வானுலகத்தை முட்ட, அந்தத்

தாக்குதலில் ஒரு ஓட்டை ஏற்பட்டதாம். அதன் வழியே சென்ற அந்த மீன் அங்கே நின்றிருந்த காமதேனுவின் மடிமீதும் முட்டியதாம். தன் கன்று தான் பால் குடிக்க வேண்டுமென்று கருதி முட்டுகிறது, என்று காமதேனு நினைத்ததாம். உடனே பாலைச் சொரிய ஆரம்பித்துவிட்டதாம். அந்தப் பால் பெருகிப் பாலாறாக ஓடிவந்ததாம்.

இப்படி ஒரு கற்பனை. இதுபோன்ற கற்பனைகளைப் படிக்கும் மனிதன் எப்படிச் சலிப்படையாமல் இருக்க முடியும்? குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள்போல் இருக்கின்றன!

அறிஞர் அப்பாத்துரைப் பிள்ளையின் சொற்களிலே சொன்னால் இதுபோன்ற கற்பனைகளைக் குட்டிப் புராணங்கள் என்றுதானே சொல்லவேண்டும். ஒரு குட்டிப் புராணத்திற்கும் இதற்கும் என்ன வேற்றுமை இருக்கிறது? பாலாறு நிலத்திற்கு வந்த காரணம் அல்லது கதை கூறப்பட்டிருக்கிறது. இவைபோன்ற பொருத்தமில்லாத, உள்ளுணர்வைத் தீண்டாத கற்பனைகளைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை "அர்த்தமில்லாக் கற்பனைகள்" என்று குறிப்பிட்டார்.

உண்மை, இயற்கை, பொருத்தம் என்று நான் குறிப்பிட்டால் நீங்கள் அந்த வார்த்தைகளை வைத்துக் கொண்டு தர்க்கம் செய்யக் கூடாது. மதிலின் உயரம் 500 அடி, அகலம் 50 அடி, அதன அடித்தளம் 100 அடி என்று அளந்து கவிஞன் அடிக்கணக்கு எழுத வேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை.

கவிஞனிடத்திலே தாமரை பேசும். செடி பேசும். கொடி பேசும். அத்தனையும் பேசி, ஆட, பாட வல்லன. பாடல்களிலே சூரியன் பேசுவான்; சந்திரன் பேசுவான. இவையெல்லாம இயற்கையல்லாதனதானே என்று கேட்கலாம். மக்கள் இதுபோன்ற கற்பனைகளை ரசிக்கிறார்களே என்று வினவலாம். அதற்கு அடிப்படையான காரணம் உண்டு. இதில் கண்ட பொருள்கள் இயற்கையில் காணக்கூடியன. ஆனால் குணம் மாற்றப் பெற்றிருக்கிறது. ஒரு தாமரைக்கும் சூரியனுக்கும் காதல் என்று ஒரு கவிதை எழுதப்படுவதாக வைத்துக்

கொள்ளுவோம். அந்தத் தாமரை பேசுகிறது; பாடுகிறது. சூரியன் ஏதோ மறுமொழி சொல்லுகிறான். இதில் உணரவேண்டிய தென்னவென்றால் இதுதான்: கவிஞன் அந்தத் தாமரையை ஒரு பெண்ணாக நினைத்துப் பார்க்கிறான். அப்படியே பாவித்துக்கொள்ளுகிறான். ஒரு பெண்ணுக்குள்ள குணங்களை அந்தத் தாமரைக்குப் பரிமாறிவிடுகிறான். ஆணுக்குள்ள பண்புகளைக் கதிரவனுக்குப் பரிமாறிவிடுகிறான். மனித குணத்தை மரம், செடி, கொடிகளுக்கு மாற்றிக்கொடுக்கிறான். ஏதோ இலட்சியம் அல்லது குறிக்கோளை அவன் விளக்க நினைக்கிறான். காதல் என்னும் மனிதப் பண்பை விளக்குகிறான். அப்பொழுது அவற்றிற்கு நாடக பாத்திரங்களாகத் தாமரையையும் சூரியனையும் கற்பித்துக்கொள்ளுகிறான். காதல் எனும் உயிர்த் தத்துவத்தின் முன் எல்லா உயிர்ப் பொருள்களையும் ஒன்றாகவே கருதுகிறான். எனவே மனிதப் பண்பு பரிமாறப்படுகிறது. இவ்வாறு குறிக்கோளைச் சித்தரித்துக் காட்டுவதற்காகப் பொம்மைகள் பேசலாம். பாடலாம், சண்டை, குப்பை, கூளம் அத்தனையும் ஆடலாம், அசையலாம், பேசலாம்.

கற்பனைகளை இரண்டு கூறாக வகுக்கலாம், இயற்கையை அடிப்படையாகக்கொண்டவை, புராணத்தை அடிப்படையாகக்கொண்டவை என. இந்த இரண்டு வகைகளில் எதுவும் மட்டமானது என்று சொல்லமாட்டேன். ஆனால் எது உயர்ந்தது என்று கேட்டால் இயற்கையை அடிப்படையாகக்கொண்ட கற்பனைகள் தான் என்று கூறுவேன். ஏனெனில் அவை எல்லை மீறுதனவாகவும், அர்த்தமுடையனவாகவும், உணர்ச்சியைத் தூண்டவல்லனவாகவும் பெரும்பாலும் அமைகின்றன. சங்க காலத்துப் புலவர்கள் இந்த வகையான கற்பனைகளையே உருவாக்கினர். இடைக்காலத்துப் புலவர்கள் பலர் உயர்வு நவிற்சியில் பெரிதும் விருப்புடையராக இருந்தனர். இயற்கையை மறந்தனர். புராண அடிப்படையில் தங்கள் கற்பனைத்தேர்களை உருட்டிவைத்தனர்.